

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 251 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை (09.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 19, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## அச்சம் வேண்டாம்

### குரங்கம்மை குறித்து வைத்தியர்கள் தகவல்

•கே. சுபானி

நாட்டில் தற்போது குரங்கம்மை வைரஸால் பாதிக்கப்பட்ட பிறந்து 15 நாட்களேயான சிசு உட்பட நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில்,...

02 பக்கம்

## சிறப்புரிமை குழு தீர்மானிக்கும்

### சபாநாயகர் அறிவிப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமை பற்றிய குழுவின் தீர்மானத்துக்கு அமைய செயற்படலாமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (08) சபையில் அறிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சபாநாயகர், இந்த விவகாரம் குறித்து பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு அனுப்பி அவர்களின் விசாரணையின் அடிப்படையில் செயற்படலாம் என்றார்.

இந்த விசாரணைகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்து கொள்ளலாம் எனவும் அழைப்பு விடுத்தார்.

# கஜேந்திரகுமார் கைது சட்டவிரோதமானது!

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எம்.பிக்கள் போர்க்கொடி

•நமது அரசியல் செய்தியாளர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் நடந்துகொண்ட விதம் தொடர்பில் நேற்று (08) இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கடும் ஆட்சேபனைகள் வெளியிடப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஆகியோர் தமது கடும் எதிர்ப்பை இதன்போது வெளியிட்டனர்.

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக புறப்பட்ட கஜேந்திரகுமார் எம்.பியை அதிகாரிகள் கைதுசெய்து அழைத்துச் சென்றமை வரம்பு மீறிய செயல் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும், எக்காரணம் கொண்டும் பாராளுமன்ற சிறப்புரிமையை மீற பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமளிக்க முடியாதென தமது உறுதியான நிலைப்பாட்டையும் சபாநாயகரிடம் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதால் பொலிஸாருக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

## 300 அடி ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்த சிறுமி

### இந்திய மத்திய பிரதேசத்தில் 55 மணிநேரத்தின் பின் மீட்பு

மத்திய பிரதேசத்தில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த இரண்டரை வயது சிறுமி 55 மணி நேரப் போராட்டத்துக்கு பின் நேற்று (08) மாலை மீட்கப்பட்டது.

உயிருடன் மீட்கப்பட்ட சிறுமி துரிதகதியில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். அந்தச் சிறுமி சுமார் 300 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றுக்குள் செவ்வாயன்று தவறி விழுந்துள்ளாள்.

இராணுவம், தேசிய பேரிடர் மீட்புக்குழு ஆகியோருடன் ரோபோ நிபுணர்களும் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

02 பக்கம்

## பொலிஸ் விசாரணையில் நீதி கிடைக்காது

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



பொலிஸாரால் தான் கைதுசெய்யப்பட்டபோது முழு பொலிஸ் திணைக்களமும் தனது சிறப்புரிமையை மீறியதால் இந்த விடயத்தில் அவர்களின் விசாரணையில் நீதியை எதிர்பார்க்க முடியாதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் நேற்று (08) தெரிவித்தார்.

அரசாங்கத்தால் எனது தந்தை கொல்லப்பட்டபோது எனது குடும்பமோ, நானோ ஓடி ஒளியவில்லை. அரசாங்கத்தின் வெள்ளைவேன் கடத்தல்களின் போதும் சட்டத்துக்கு புறம்பான கொலைகளின் போதும் நான் ஓடி ஒளியவில்லையென அவர் அங்கு சுட்டிக்காட்டினார். பொலிஸாரால் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜூன் 5ஆம் திகதி மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்னை தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி வாக்குமூலம் வழங்குமாறு கேட்டார்.

02 பக்கம்

## கஜேந்திரகுமார், சுமந்திரன் எம்.பிமார் அமைச்சர் டிரானுடன் வாய்த்தர்க்கம்!

### சபையில் நேற்று 'கொட்டியா' கோஷங்கள்

•நமது நிருபர்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட விவகாரத்தினால் நேற்று (08) மாலை சபையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உரையொன்றை ஆற்றி இந்த கைது தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இது தொடர்பில் விளக்கமளிக்க முற்பட்டதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன்,...

02 பக்கம்

## பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சபையின் கவனத்துக்கு



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விரிவாக சுட்டிக்காட்டு

மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரிவாக சபையில் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவற்றுக்கு அரசாங்கம் முன்வைக்கும் தீர்வுகள் எவையெனவும் கேள்வி எழுப்பினார்.

இவ்விடயங்களை கருத்திற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (08) பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் கேள்விகளை முன்வைத்தார்.

2022ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம்,...

02 பக்கம்

## சப்ரகமுவ ஆளுநர் இராஜினாமா



•கே. சுபானி

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நாளையதினம் (10) தமது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

தமது இராஜினாமாக் கடிதத்தை தொலைநகல் மூலம் நேற்று முன்தினம் (07) ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக ஆளுநரின் அலுவலகப் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## சபையில் போலி வாக்குறுதி அளித்த ஜனாதிபதி ரணில்

### பெருந்தோட்ட மக்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படாமைக்கு மனோ சபையில் விசனம்



•நா.தினுஷா

"மலையகப் பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களை விவசாயத்துக்கு பயன்படுத்துவதற்காக பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உறுதியளித்தார். அதற்கு 'மனோ கணேசன் பிளேன்' எனவும் அவரே பெயர் வைத்தார். எனக்கு பெயரும் வேண்டாம், வாக்கும் வேண்டாம். அவற்றை நீங்களே பெற்றுக்கொள்ளுங்கள். எமது மக்களுக்கு காணி கிடைத்தால் போதும்"...

02 பக்கம்

## தலைமுறையை அழிக்கும் வெளிநாட்டுக் கூலிக்காரர்



### சாணக்கியன் மீது அமைச்சர் சப்ரி கடும் தாக்கு

•நமது நிருபர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனை வெளிநாட்டுக் கூலிக்காரர் என சபையில் நேற்று (08) கடுந்தொனியில் விமர்சித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, அந்நிய சக்திகளின் தேவைகளுக்காக தலைமுறையை அழிக்க முயற்சிக்க வேண்டாமென வலியுறுத்திக் கூறினார். பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது ஒழுங்குப் பிரச்சினையொன்றை...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



என்னது சாணக்கியன் வெளிநாட்டு கூலிக்காரரா? சுதந்திரக் கட்சி அமைப்பாளர் பதவியை கொடுக்கும்போது இதெல்லாம் தெரியாமல் போச்சோ...?

## வவுனியாவில் வைத்தியர் கொலை

## 14 ஆண்டுகள் கழித்து மரண தண்டனை தீர்ப்பு

•சிவகுமார் திவியா

வவுனியாவில் மகப்பேற்று வைத்திய நிபுணர் மொஹமட் சுல்தான் மீரா முகைதீன் என்பவரை சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய புளொட் அமைப்பைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

வவுனியா, கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி கடமையில் இருந்த மகப்பேற்று வைத்திய நிபுணரான மொஹமட் சுல்தான்...

02 பக்கம்

## நிபந்தனைகளை மீறிய ஒப்பந்த நிறுவனங்கள்

### 255 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

•நா.தினுஷா

ஒப்பந்ததாரர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் 255 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடந்த வாரம் எந்தவொரு வகையான எரிபொருளினதும் குறைந்தபட்ச அளவு முகாமைத்துவம் செய்யப்படவில்லை என்றும் அவ்வாறு ஒப்பந்த நிபந்தனைகளை மீறி செயற்பட்டோர் தொடர்பில் மீளாய்வை முன்னெடுத்து சட்ட நடவடிக்கை...

02 பக்கம்

### உஷ்



சப்ரகமுவ மாகாண ஆளுநராக பணிபுரிந்த டிக்கிரி கொப்பேகடுவ பதவியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து அந்த இடத்துக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திசாநாயக்க நியமிக்கப்படவுள்ளதாக தகவல்.

இந்த ஆளுநர் பதவியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனாலும் அதனை ஜனாதிபதி ஏற்கவில்லையென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அச்சம் வேண்டாம்...

சமூகத்துக்கு எவ்வித அச்சுறுத்தலுமில்லை என்பதால் வைரஸ் குறித்து பொது மக்கள் பீதியடைய வேண்டாம்" என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வைத்தியர் சமித்த கினிகே மேலும் தெரிவிக்கையில்,

குரங்கம்மை வைரஸ் இலங்கையில் தோன்றியதல்ல. ஆகையால் இது சமூக பரவலை ஏற்படுத்தும் என அச்சம் கொள்ளத் தேவையில்லை.

பாதிக்கப்பட்ட நோயாளிகள் சமூகத்தில் வெளிப்படுவதை தடுக்க அனைத்துவித பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆதலால் பொதுமக்கள் பீதியடைய தேவையில்லை - என்றார்.

இதேவேளை, வெளிநாட்டுகளிலிருந்து நாடு திரும்புவோர் குரங்கம்மை அறிகுறிகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என தேசிய தொற்றுநோய் வைத்தியசாலையின் (ஐ.டி.எச்) பணிப்பாளர் டொக்டர் தினேஷ் கொக்கலகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் டுபாயிலிருந்து நாடுக்கு திரும்பிய தாய் மற்றும் மகள் உட்பட மேலும் இரு குரங்கம்மை தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு நேற்றுமுன்தினம் (07) நாட்டுக்கு வருகை தந்த பிலிப்பைன்ஸ் பிரஜையான பெண்ணொருவரும் அவரது மகளும் குரங்கம்மை காய்ச்சலுக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு அவரது கணவனிடமிருந்து வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்தவகையில் நாட்டில் தற்போது குரங்கம்மை வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளதென சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் (07) தெரிவித்துள்ளது.

டுபாயிலிருந்து நாட்டுக்கு வருகைதந்த தாயொருவருக்கு குரங்கம்மை தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த நிலையில் அவரது குழந்தை குரங்கம்மை வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் கடந்த 4ஆம் திகதி லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நிலையில் குழந்தைக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் குழந்தை ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது குரங்கம்மை பாதிக்கப்பட்ட இருவரும் ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இலங்கையில் முதலாவது குரங்கம்மை தொற்று கடந்த 2022 நவம்பர் 4ஆம் திகதி பதிவாகியிருந்தது. டுபாயிலிருந்து நவம்பர் முதலாம் திகதி நாடு திரும்பிய 20 வயதுடைய இளைஞரொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவருக்கு குரங்கம்மை வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி குரங்கம்மை தொற்றுக்குள்ளான இரண்டாவது நபர் இனங்காணப்பட்டுள்ளார்.

எம்பொக்ஸ் எனப்படும் குரங்கம்மை வைரஸால் ஏற்படும் ஒரு நோயாகும். இது ஒரு வைரஸ் தொற்றாகும். வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் தொட்ட பொருட்கள் மற்றும் மேற்பரப்புகளிலிருந்து சமூகத்துக்கு பரவுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றின்படி குரங்கம்மை வைரஸ் தொற்றின் அறிகுறிகள் 2 முதல் 3 வாரங்கள் நீடிக்கும். இது காய்ச்சல், தலைவலி, தசைவலி, முதுகுவலி, குறைந்த ஆற்றல் மற்றும் வீங்கிய சுரப்பிகள் (நிணநீர் முனைகள்) ஆகிய ஆரம்ப அறிகுறிகளுடன் ஆரம்பிக்கலாம். அத்துடன் அரிப்புடன்கூடிய கொப்புளங்கள் அல்லது புண்கள் தோன்றுதல், அவை முகம் உள்ளங்கைகள், பாதம், இடுப்பு பிறப்புறுப்பு மற்றும் குதப் பகுதிகளை பாதிக்கலாம். இந்த புண்கள் வாய், தொண்டை, ஆசனவாய், மலக்குடல் அல்லது கண்களில் கூட காணப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கஜேந்திரகுமார், சுமந்திரன்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அமைச்சருடன் தர்க்கப்பட்டனர்.

பொலிஸாரை அவமதிக்கும் வகையில் பேசிய கஜேந்திரகுமாரின் பேச்சுக்கு பொலிஸ் திணைக்கத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அதிருப்தியை தெரிவிப்பதாகவும் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட பின்னரே தான் கைதுசெய்யப்படவுள்ளதாக சபாநாயகருக்கு தகவலை கஜேந்திரகுமார் எம்.பி. வழங்கியதாகவும் அமைச்சர் டிரான் கூறினார்.

வடக்கு மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் பரீட்சைகள் பிற்பகலுக்குள் முடிவடைந்த பின்னரும் பொலிஸார் தாம் இருந்த பரீட்சை மண்டபத்துக்கு அருகில் வந்ததன் மர்மம் என்னவென்று அமைச்சர் டிரானிடம் கேள்வியெழுப்பிய கஜேந்திரகுமார் எம்.பி, அமைச்சரின் கூற்றை நோக்கினால் இந்த சம்பவத்தின் பின்னணியில் அமைச்சரின் உத்தரவு உள்ளதா என்று சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

பொலிஸ் சீருடையில் இருந்த எவரையாவது நான் அவமரியாதையாக பேசினேனா? சிவில் உடையில் இருக்கும் ஒருவர் பொலிஸ்தான் என்று நான் எவ்வாறு நினைக்க முடியும். அப்படியானால் எவர் வேண்டுமானாலும் தன்னை பொலிஸ் என்று கூறலாமே? யாரோ ஒரு சிவில் உடையில் இருந்தவர் என்னை அந்த இடத்திலிருந்து அகன்று செல்லுமாறு கூற முடியாது. அது எனது தேர்தல் தொகுதி. என் மக்கள் அங்கே இருக்கிறார்கள் அமைச்சரே அவர்கள் உங்களின் மக்கள் அல்ல. என்று குறிப்பிட்டார் கஜேந்திரகுமார் எம்.பி.

இதன்போது பேசிய சுமந்திரன் எம்.பி, கஜேந்திரகுமார் எம்.பியின் கேள்விக்கு அமைச்சர் சரியான பதிலை வழங்கவில்லையென்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த வார்த்தைப் பிரயோகங்களையடுத்து கஜேந்திரகுமார் எம்.பிக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் முஸம்மில் கருத்து வெளியிட்டார். இந்தப் பிரச்சினையை வைத்து இன ரீதியான அரசியல் செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அதேசமயம் ஆளுங்கட்சி பக்கம் இருந்து 'கொட்டியா கொட்டியா' என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் வருகைதந்து சபைக்குத் தலைமை தாங்கினார். இந்த பிரச்சினை சட்டத்துறையினரின் கைகளில் இருப்பதால் சிறப்புரிமைக்குழு போன்ற உரிய இடத்தில் இதனை பேசித் தீர்த்துக்கொள்ளலாமென சபாநாயகர் குறிப்பிட்டதையடுத்து சர்ச்சை முடிவுக்கு வந்தது.

## 300 அடி ஆழ்துளை...

இந்நிலையில், 55 மணி நேரமாக ஆழ்துளை கிணற்றுக்குள் இருந்ததால் சிறுமி அதிர்ச்சியில் இருப்பதாக வைத்தியர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டது. பாறைகள் மிக்க பகுதி என்பதால் பள்ளம் தோண்டுவதிலும் தாமதமாகியுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## சப்ரகமுவ ஆளுநர்...

வெளிநாட்டில் சில வாரங்களாக தங்கியிருந்த நிலையில் நாடுதிரும்பிய டிக்கிரி கொப்பேகடுவ, இராஜினாமா கடிதத்தை கையளித்ததன் பின்னர் நேற்றும் நேற்றுமுன்தினமும் ஆளுநர் அலுவலக கடமையில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில், டிக்கிரி கொப்பேகடுவவின் இராஜினாமா கடிதம் கிடைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் உயர் அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க பதவியேற்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

## நிபந்தனைகளை மீறிய...

எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆலோசனை வழங்கியுள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் எரிபொருள் களஞ்சிய அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (08) இடம்பெற்றது. அதன்போதே அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சர் அவரின் உத்தியோகப்பூர்வ டுவிட்டர் கணக்கில்,

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முகாமைத்துவம் செய்யப்படும் 1050 எரிபொருள் நிலையங்களில், 432 எரிபொருள் நிலையங்களில் மாத்திரமே கடந்த வாரம் சகல வகையான எரிபொருள் தயாரிப்புகளிலும் குறைந்தபட்ச இருப்பு வைத்திருந்தது.

மேலும், 363 ஒப்பந்ததாரர்கள் ஒரு எரிபொருள் விநியோகத்துக்கான குறைந்தபட்ச இருப்பை வைத்திருந்தன. இதேவேளை, 255 ஒப்பந்ததாரர்கள் எந்தவொரு எரிபொருள் தயாரிப்புகளிலும் குறைந்தபட்ச இருப்புகளை பராமரிக்கத் தவறியுள்ளன.

ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக மதிப்பாய்வை முன்னெடுத்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த 18 மாதங்களுக்கான மின்சார சபையின் இருப்பு நிலை மறுசீரமைப்பு, எரிபொருள் போக்குவரத்து பவுசர்களுக்கான கொடுப்பனவுகள், தேசிய எரிபொருள் கோட்டாமுறையிலான விநியோக முறை, நாடுமுழுவதுமான எரிபொருள் விநியோகத் திட்டம், எரிபொருள் களஞ்சியங்களின் உட்கட்டமைப்பு முகாமைத்துவ திட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## தலைமுறையை அழிக்கும்...

எழுப்பிய அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

வெளிநாட்டு கூலிக்காரர் ஒருவர் இருக்கிறார். இராசமாணிக்கம் என்றுதான் அவரை அழைக்கிறார்கள். அவர் பிரச்சினைகளை தொடர்ந்தும் கொண்டுசெல்லவே உதவுகிறார். அவர் வெளிநாட்டு கூலிப்படையாக செயற்படுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நான் வீடு கொடுத்ததாக கூறுகிறார். நான் யார் அவருக்கு வீடு கொடுப்பதற்கு? நான் கடினமாக உழைத்து ஒரு வீடு வைத்திருக்கிறேன். அங்குதான் வசிக்கிறேன். அரசாங்கத்தின் வீடுகளை நான் பெறுவதில்லை. வெளிநாட்டுப் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் உபயோகித்த வீட்டைப் பயன்படுத்தினேன்.

வெளிநாட்டு சக்திகளுக்காக ஒரு தலைமுறையை அழிக்காதீர்கள். மஹிந்தவின் தலைமையில், பாதுகாப்பு அமைச்சர் கோட்டபாயவின் காலத்தில் சாணக்கியன் தேர்தலில் போட்டியிட்டவர்.

நாங்கள் நல்லிணக்க செயற்பாட்டை தொடர்வோம். இவர்களின் விமர்சனத்தை கருத்தில் எடுக்க மாட்டோம் என்றார்.

## பொலிஸ் விசாரணையில்...

நான் பாராளுமன்றம் செல்வதாகவும் திரும்பி வந்து தேவையான வாக்குமூலம் வழங்குவதாகவும் கூறினேன் என சபாநாயகரிடம் குறிப்பிட்டதாக தெரிவித்தார்.

நான் உடனே சபாநாயகரை தொடர்பு கொண்டேன். அவர் வெளிநாட்டில் இருப்பதாக ஒலிப்பதிவு செய்த குறுஞ்செய்தி வந்தது. நான் வட்ஸ்அப் தகவல் அனுப்பினேன். பின்னர், பிரதி சபாநாயகரை தொடர்பு கொண்டு பேசினேன். அவர் பாராளுமன்ற அமர்வு முடிந்ததும் வாக்குமூலம் வழங்குமாறு கூறினார்.

நான் மருதங்கேணி பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு விடயத்தை கூறி, 12ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதாக தெரிவித்தேன். அவர் விரைவில் வாக்குமூலம் வழங்கி இந்த விவகாரத்தை முடிக்குமாறு கேட்டார்.

பின்னர் எனது வீட்டுக்கு வந்து சிங்கள மொழி ஆவணமொன்றை வழங்கி 8ஆம் திகதி வாக்குமூலம் வழங்குமாறும் பொலிஸார் குறிப்பிட்டனர். அவர்கள் வழங்கிய ஆவணம் சிங்கள மொழியிலிருந்ததால், அதை ஏற்கவில்லை. பொலிஸார் ஆவணத்திலிருந்ததை வாசித்து காண்பித்தனர்.

நான் 6ஆம் திகதி பாராளுமன்ற செயலாளருக்கு கடிதம் சமர்ப்பித்து, 7ஆம் திகதி சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பவிருந்தேன். நான் 8ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதாகவும் தெரிவித்தேன்.

என்றாலும், 7ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஜெயபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரி எனது வீட்டுக்கு வந்து, என்னை கைது செய்து ஒரு வாக்குமூலம் பெறவுள்ளதாக தெரிவித்தார். என்றாலும், சபாநாயகரிடம் பேசிய விடயத்தையும் 8ஆம் திகதி வாக்குமூலம் வழங்கவுள்ளதாகவும் ஏன் பொலிஸாருக்கு இந்த அவசரமென்றும் கேட்டேன்.

இது தனக்கு வழங்கப்பட்ட கட்டளை என்றனர்.

நான் மீளவும் உங்களிடம் தொடர்பு கொண்டேன். என்னை கைது செய்யும் ஆணையிருந்தால் உங்களால் தடுக்க முடியாதென்றார். அப்படியொரு ஆணையில்லையென்றால் அவர்களால் தடுக்க முடியாதென்றீர்கள்.

என்னை கைது செய்யும் ஆவணம் இருக்கிறதா என்றேன். இல்லையென்றார்கள். நான் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டேன். பின்னர், கொள்ளுப்பிட்டி பொலிஸார் ஒரு ஆவணத்தை தந்தார்கள். அது என்னிடம் தந்து பலனில்லை, எனது குடும்பத்தினரிடம் வழங்க வேண்டும் என்றேன். அவர்கள் மறுத்து விட்டார்.

பின்னர், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் நிறுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டேன்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தவறான தகவல்களை பரப்பியுள்ளார். பல சிங்கள, ஆங்கில ஊடகங்கள் பொலிஸாரின் தகவல்களை மட்டும் தவறான தகவல்களை பரப்பியுள்ளன.

'திவயின' பத்திரிகை நான் தலைமறைவாக உள்ளதாக செய்தி வெளியிட்டது.

எனக்கு நடந்தது பாரபட்சமானது.

பொலிஸ் மோசடி நிறைந்த, தமிழ் மக்களுக்கு எதிரானது என்பது எனக்கு நடந்த விடயத்தின் மூலம் உறுதியாகியுள்ளது. எனது விடயத்தில் பொலிஸார் பாரபட்சமாக நடந்துள்ளனர்.

பொலிஸார் நடந்த விடயம் தொடர்பில், தமக்குள் ஆராயாமல், என்னை விசாரித்துள்ளனர். முழு பொலிஸ் திணைக்களத்தின் மூலமும் எனது உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இதன்மூலம் நடந்த சம்பவம் பற்றிய நியாயமான விசாரணை நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனது சிறப்புரிமையை மீறிய இந்தச் சம்பவம் பற்றி முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

## பெருந்தோட்ட மக்கள்...

இலங்கையில் தேயிலை உற்பத்தியில் விரைவான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அண்மைக் காலத்தில் பதிவான மிகக் குறைந்த தேயிலை உற்பத்தியாகவும் இது கருதப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் அரசாங்கத்தின் சேதன பசளைக் கொள்கையாகும்.

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்திருப்பது தொழில்நுட்ப காரணங்களைக் காட்டி நழுவும் அரசியல் வாக்குறுதியாகவே இருந்து வருகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது கிடைக்கும் கொடுப்பனவுகள் அனைத்தையும் சேர்த்தாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வாழ்வதற்கு அது போதுமானதாக இல்லை.

இரசாயன உரங்களை தடைசெய்து சேதன உரங்களை பயன்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் முட்டாள்தனமான முடிவின் நீண்டகால விளைவின் பயனாக இந்நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா?

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களுடன் ஒப்பிடும்போது தோட்டத் துறையில் உள்ள சிறுவர்கள் கல்வியில் குறைந்த சலுகை பெற்றவர்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? தோட்டத் துறையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும் பாடசாலைகளுக்கான வசதிகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன், பெருந்தோட்ட மக்களின் போசாக்கு நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

குளவிகள், சிறுத்தைப்புலிகள், பன்றிகள் போன்றவற்றால் தோட்டத் தொழிலாளர் கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்பதை அரசாங்கம் தெரிந்து வைத்துள்ளதா? எனப் பல்வேறு கேள்விகளை முன்வைத்தார்.

இதேவேளை, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கையில், 2022ஆம் ஆண்டு தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டு 299 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. அதேபோன்று 2022ஆம் ஆண்டு 252 மில்லியன் கிலோ கிராமாக தேயிலையே உற்பத்தி வீழ்ச்சியை சந்தித்திருந்தது. அதற்கமைய, 47 மில்லியின் கிலோ கிராம் தேயிலை உற்பத்தியே இடம்பெற்றுள்ளது. இது தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியாகும்.

இருந்தபோதும், உரத்துக்கு இருந்த கேள்விநிலை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதால், இந்த வருடத்தின் முதலாவது காலாண்டில் தேயிலை உற்பத்தியில் விருத்தி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 16 சதவீதத்தால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியை சந்தித்துள்ளது. நாட்டில் பொதுவாக வருடாந்தம் 300 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதும், கேள்வி அதிகரித்துள்ளதால் எமக்கு கிடைக்கும் ஏற்றுமதி வருமானத்தில் எந்த வீழ்ச்சியும் இடம்பெறவில்லை.

2022ஆம் ஆண்டு 1. 269 பில்லியன் டொலரும் 2021ஆம் ஆண்டு 1.324 பில்லியன் டொலரும் 2020ஆம் ஆண்டு 1. 241 பில்லியன் டொலரையும் ஏற்றுமதி வருமானமாக பெற்றுக்கொண்டுள்ளோம். 2020ஆம் ஆண்டு 1.241 பில்லியன் டொலரும் 2022ஆம் ஆண்டு 1.369 மில்லியன் டொலரும் வருமானமாக அடைந்துள்ளோம். 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது வருமானம் அதிகரித்தே இருக்கிறது.

உற்பத்தி குறைவடைந்து கேள்வி அதிகரித்ததால் ஒரு கிலோ கிராம் தேயிலை கொழுந்துக்கு 350 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் ஒருகிலோ தேயிலை கொழுந்துக்கு அதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டது இதுவே முதன்முறையாகும். மாத்தளை மாவட்டத்தில் அரசின் கீழ் இயங்கும் தேயிலை நிறுவனமொன்றினால் ஒரு கிலோ தேயிலைக்கு 420 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு கீழைத்தேய தேயிலை ஒருகிலோ 85 ரூபாவுக்கும் மத்திய கிழக்கு தேயிலை ஒரு கிலோவுக்கு 60 – 65 ரூபாவுக்கும் மேலைத்தேய தேயிலை ஒரு கிலோவுக்கு 50 - 55 ரூபாவும் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், கடந்த வருடம் கீழைத்தேய தேயிலையின் விலை 350 - 400 ரூபாகவும் மத்திய கிழக்கு தேயிலையின் விலை 200 – 250 ரூபாவாகவும் மேலைத்தேய தேயிலையின் விலை 200 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

தற்போது உற்பத்தி அதிகரித்துள்ளது. அவ்வாறு உற்பத்தி அதிகரிக்கும்போது விலை வீழ்ச்சியை சந்திக்கும். தற்போது விலை படிப்படியாக குறைவடைந்து வருகிறது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 667 பில்லியன் டொலரும் இந்த வருடம் ஏப்ரல் மாதமாகும்போது 460 மில்லியன் டொலரும் வருமானமாக கிடைத்துள்ளது என்றார்.

## சபையில் போலி வாக்குறுதி...

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சபையில் நேற்று (08) விசனம் வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் மனோ எம்.பி. தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டிலுள்ள உணவுப் பிரச்சினை நிறைவடைந்து விட்டதாக அரசாங்கம் கூறினாலும், பெருந்தோட்டப் பகுதிகளில் அந்த பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. உணவுப் பிரச்சினை ஆபத்தான நிலையை அடைந்துள்ளது. உணவு தட்டுப்பாட்டால் அந்த மக்களின் உணவு உண்ணும் வீதமும் பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஆகவே, அரசாங்கம் அந்த மக்களின் உணவு பிரச்சினை தொடர்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

மாத்தளை, தெனியாய மொரவக்க தோட்ட பகுதியொன்றிலுள்ள வீடுகளில் சிறியளவான பயிர்ச்செய்கைகளை முன்னெடுத்து வருகிறார்கள். வாழை, மரக்கறி உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் இந்த பிரதேசத்தில் பயிரிடப்பட்டுள்ளன. அந்த பயிர்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. எதற்காக இதனை செய்தார்கள் என்று புரியவில்லை.

அந்த மக்கள் அப்பாவிகள். பெருந்தோட்ட மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளாவர். இருந்தபோதும், அவர்கள் இன்னும் முழுமையான பிரஜைகள் இல்லை. தொடர்ந்து நாங்கள் இலங்கையர்களாக செயலாற்றவே விரும்புகிறோம். அதனை புரிந்துகொள்ளுங்கள்.

தோட்டம் என்றால் அங்குள்ள தேயிலை, இறப்பர் பயிர்கள் மற்றும் காணி அல்ல. அது அங்கு உயிர் வாழும் மக்கள்.

இன்றைய ஜனாதிபதி பிரதமராக இருக்கும் போது இதோ இந்த இடத்தில் இருந்து எனக்கு வாக்குறுதி அளித்தார். காய்கறி பயிரிட்டு உணவு பிரச்சினையை தீர்த்துக்கொள்ள தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு, காணி தருவதாக சொன்னார்.

விவசாய, பெருந்தோட்ட அமைச்சர்களை, எம்முடன் தொடர்புபடுத்தி காணிகள் தருவதாக சொன்னார். அந்த காணொளி சமூக ஊடகங்களில் வைரலாக இப்போதும் போகிறது.

இன்று, பிரதமர் ஜனாதிபதி ஆகிவிட்டார். ஆனால் எமது மக்களுக்கு காணி கிடைக்கவில்லை.

அந்த திட்டத்துக்கு பெயரும் வைத்தார். 'மனோ கணேசன் பிளான்' என்று சொன்னார். எனக்கு பெயரும் வேண்டாம், வாக்கும் வேண்டாம். அவற்றை நீங்களே பெற்றுக்கொள்ளுங்கள். எமது மக்களுக்கு காணி கிடைத்தால் எனக்கு போதும்.

இந்த முக்கியமான விடயத்தை நாட்டின் கவனத்துக்கு கொண்டு வந்தமைக்காக எதிர்க்கட்சி தலைவருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்த முக்கியமான விடயம் பேசும் போது இங்கே, விவசாய, கல்வி, பெருந்தோட்ட அமைச்சர்கள் இருக்கிறீர்கள். எங்கே தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்? அவர் இங்கே சபையில் இருந்திருக்க வேண்டும்.

நீங்கள் காணி தருவது ஒருபுறம் இருக்கட்டும். இதை பாருங்கள். உங்கள் தென்மாகாண, மாத்தறை, தெனியாய மொரவக்க தோட்டத்தில், அப்பாவி தோட்ட மக்கள் விளைவித்த வாழை மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்களை காடையர்கள் வெட்டி நாசமாக்கியுள்ளனர்.

இதென்ன அநியாயம்?

நாம் இந்நாட்டு பிரஜைகள்தானே? இன்று பிரஜாவுரிமை இருந்தாலும் முழுமையான பிரஜைகளாக நாம் இன்னமும் மாறவில்லை. நாம் இலங்கைக்கு வெளியே வழி தேடவில்லை. இலங்கை என்ற வரம்புக்குள் முழுமையான இலங்கையராக வாழத்தான் விரும்புகிறோம்.

இன்று கல்வி, சுகாதாரம் எல்லாவற்றிலும் நாம் பின்தங்கியுள்ளோம். எமது மக்களுக்கு விசேட அவதானம் தேவைப்படுகிறது. அதை காட்டுங்கள் என்றார்.

## வவுனியாவில் வைத்தியர் கொலை...

மீரா முகைதீன் என்ற வைத்தியர் கடமை முடித்து மாலை 6.45 முதல் 7 மணி வரையான நேரத்தில் வீடு செல்ல தயாரானபோது தனியார் வைத்தியசாலை வாயிலில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அரச சட்டத்தரணிகளான தர்சிகா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

நெடுமாறன் என அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்பவர் மொஹமட் சுல்தான் மீரா முகைதீன் என்பவருக்கு மரணத்தை விளைவித்ததன் காரணமாக 296 பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய கொலை குற்ற வழக்காகும். இவ் வழக்கு இரசாயன பகுப்பாய்வு அறிக்கை மூலம் வழக்கு தொடுனருக்கு தொடுக்கப்பட்ட வழக்காகும். இதற்கமைய எதிரி 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி குறித்த பத்திரத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மன்றில் தமிழ் மொழியில் எதிரிக்கு வாசித்து காட்டப்பட்டது.

இதனைக் கேட்ட எதிரி தான் சுற்றவாளி என மன்றில் கூறினார். இதற்கமைய ஜூரர்கள் சபை இல்லாத விளக்கத்தை தெரிவு செய்து கோரினார். இதனை மன்று ஏற்று ஜூரர்கள் சபை இல்லாத வழக்குக்கு உத்தரவிட்டது.

இதன்போது 20 சாட்சியங்கள் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அபிசா வைத்தியசாலை வைத்தியர், தாதியர், மருந்தாளர், பணியாளர் மற்றும் 7ஆவது சாட்சியமும் 19ஆவது சாட்சியமும் இந்த வழக்கின் திருப்பு முனையாக அமைந்தது.

ஏழாவது சாட்சியாக இரசாயன பகுப்பாய்வாளர் சட்டவைத்திய அதிகாரி மடவல என்பவரின் சாட்சியும் தடயவியல் ஆய்வு கூட அறிக்கை படியும் நெடுமாறன் என்பவரின் 1100 என்ற இலக்கமுடைய துப்பாக்கியில் இருந்து சுடப்பட்ட 4 தோட்டாக்கள் தான் குறித்த வைத்தியரின் உடலை தாக்கியது என்பதை மன்றில் தெரிவித்தார்.

பத்தொன்பதாவது சாட்சியாக வவுனியா, மருகாரம்பளை பகுதியில் உள்ள இராணுவ சோதனை சாவடியில் வீதி தடை சோதனையில் ஈடுபட்டிருந்த கொடக தெனிய கெதர என்ற இராணுவ வீரர் சாட்சியமளிக்கையில், குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது அவ் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் 10க்கும் மேற்பட்ட நபர்களால் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட இருப்பு, தகரங்கள் இறக்கி ஏற்றப்பட்டன. இதற்கான அனுமதிப் பத்திரத்தை சோதனை செய்த போது அவர்களிடம் அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை. அவர்களிடம் கைத்துப்பாக்கி ஏதாவது இருக்கின்றதா என வினவினேன். இராணுவத்தினரின் சாதாரண சோதனை இடுப்பு பகுதியை சோதனையிடுவதாகும். அந்த வகையில் பழனிமுத்து சிவராசா என்பவரின் இடுப்பு பகுதியில் இருந்து பிஸ்ரல் ஒன்று மீட்கப்பட்டது. அதன்போது நெடுமாறன் என்பவரும் தன்னிடம் ஒரு துப்பாக்கி இருப்பதாக 1100 என்ற இலக்கமுடைய பிஸ்ரலை இராணுவத்தினரிடம் காண்பித்தார் என மன்றில் தெரிவித்தார்.

அத்துடன், இதே நீதிமன்றில் பிறிதொரு வழக்கில் குறித்த எதிரியான நெடுமாறனின் உடைமையில் இருந்து பெறப்பட்டது 1100 என்ற இலக்கமுடைய துப்பாக்கி தான் என இராணுவ வீரர் அடையாளம் காட்டியிருந்தார்.

இதனடிப்படையில், மேல்நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்றையதினம்(08) தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது. இதன்போது, 7ஆம், 19ஆம் சாட்சிகளின் அடிப்படையிலும் பகுப்பாய்வு திணைக்கள அதிகாரியின் சாட்சியங்களின் படியும் சந்தர்ப்பம், சூழ்நிலைகளின் படி சங்கிலி கோர்வையாக ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகக் கூடிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் வழக்கு தொடுனர்களான தர்சிகா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் என்பவர்களால் சந்தேகத்துக்கு அப்பால் எதிரி தான் குற்றத்தை புரிந்துள்ளார் என நிரூபித்துள்ளார்கள். இதற்கமைய எதிரிக்கு மரணதண்டனை வழங்கி மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வவுனியாவை சேர்ந்த புளொட் அமைப்பின் உறுப்பினரான நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்ற நபருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த நபர் தமிழ் மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) வவுனியா வேப்பங்குளம் முகாமுக்கு பொறுப்பாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் 14 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்திருந்தன. தீர்ப்பின் பின்னர் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை வரலாறு'

## மூன்றாவது பதிப்பு ஜனாதிபதியிடம் கையளிப்பு





இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தினேஷ் வீரக்கொடி எழுதிய 'ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை வரலாறு' என்ற நூலின் மூன்றாம் பதிப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. இதுதொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் (07) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, ஜனாதிபதியின் விசேட திட்டப்பணிப்பாளர் தீக்ஷன அபேவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்ட இந்நூல் முதன்முதலில் 2017இல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க புதிய ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கைக்குள் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் பெற்றோலியப் பொருள் இறக்குமதி, களஞ்சியம், விநியோகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கம், ஆர்.எம்.பார்க்ஸ் (RM Parks Inc) நிறுவனத்துடன் நீண்ட கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (08) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பீ.டீ.யூ.கே.மாபா பத்திரண மற்றும் ஆர்.எம்.பார்க்ஸ் தலைவர் ஜெஸ்டின் டிவிஸ்(Justion Divis) ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டதன் பின்னர் ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனம் ஷெல் நிறுவனத்துடன் இணைந்து 45 நாட்களுக்குள் முன்னெடுப்புகளை ஆரம்பிக்க இந்த ஒப்பந்தத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

கடன் பத்திரங்களை திறந்து பட்டியல்களை மீளச் செலுத்துவதற்கு போதியளவான வெளிநாட்டு வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் கடந்த காலத்தில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்கள் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தன.

அதனால் நுகர்வோருக்கு தொடர்ச்சியான எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைவாக மேற்படி மின்சக்தி எரிசக்தி அமைச்சினால் இந்த மூலோபாயத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன் முதல்கட்டமாக, அமைச்சரவை அங்கீகாரத்துடன், நாட்டில் செயல்படும் விநியோக முகவர் வலையமைப்புகள் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிறுவப்பட்டுள்ள புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு முதலீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டது.

இங்கு, சந்தையில் நுழையும் புதிய சில்லறை விநியோகஸ்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகளில், உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச் செலாவணி தேவைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பது பிரதானமானதாகும். அதன்படி, இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம் செயற்படத் தொடங்கி ஆரம்ப ஓராண்டு காலத்தில் வெளிநாட்டு மூலங்கள் ஊடாக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படும்.

2002ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழு (CASC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) ஆகியவை முன்மொழிவுகளை ஆய்வு செய்து, பேச்சுவார்த்தைகளுக்கு உட்பட்டு பின்வரும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க பரிந்துரைத்தன. அந்த நிறுவனங்கள், Sinopec Fuel Oil Lanka (Private) Limited, F5, ஹம்பாந்தோட்டை மெரிடைம் நிலையம், மிரிஜ்ஜவெல, ஹம்பாந்தோட்டை United Petroleum Pty Ltd, 600, கிளென்பெரி வீதி ஹேதோன், விக்டோரியா 3122, அவுஸ்திரேலியா Shell PLC உடன் ஒத்துழைப்புடன் RM Parks, 1061 N பிரதான வீதி, போர்ட்டர்வில், கலிபோர்னியா 93257, அமெரிக்கா சினோபெக் ஓயில் லங்கா தனியார் நிறுவனம் (M/s Sinopec Fuel Oil Lanka (Private) Limited ) (M/s Sinopec) மற்றும் அதன் தாய் நிறுவனத்துடன் நாட்டில் சில்லறை எரிபொருள் வர்த்தகத்தில் பிரவேசிப்பதற்கு கடந்த மே மாதம் 22ஆம் திகதி அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர்களான டி.வி.சானக, இந்திக அனுருத்த, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் குறித்த அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள்**

**வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** எதிர்பாராத தன, பொருள் வரவுகளால் மகிழ்ச்சி. வெளிநாட்டு அல்லது வெளியிட உதவிகள், நன்மைகள் உண்டு.

**ரிஷபம்:** நீங்கள் விரும்பிய தொழில் அல்லது இடமாற்றங்கள் இன்று ஏற்படும். பாவத்துவமான விடயங்களில் ஈடுபட வேண்டாம்.

**மிதுனம்:** பெரியோர், குருவின் ஆசிர்வாதங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். ஆலய வழிபாடு அல்லது திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்:** முயற்சிகளில் தோல்வியும் அவமானமும் ஏற்படலாம். உங்கள் பணம் பொருள் நட்டமாகலாம்.

**சிம்மம்:** அரச வகையில் சில சங்கடங்கள் உருவாகலாம். பொறுமை மற்றும் அவசரமற்ற தன்மையோடு செயல்படுங்கள்.

**கன்னி:** தொழில், வியாபார மேன்மை, இலாபம் உண்டு. எதிரிகள் கீழ்படிந்து நடந்து கொள்வார்கள். நோய் கவனம்.

**துலாம்:** புத்திர வகையில் சில செலவுகள், அல்லது கவலைகள் உண்டு. வயிறு சம்பந்தப்பட்ட சில உபாதைகளால் அவதி.

**விருச்சிகம்:** தாயால் கவலைகள் அல்லது செலவுகள் ஏற்படும். வீடு, வாகன மாற்றங்கள், சிக்கல்கள் உண்டு.

**தனுசு:** பராக்கிரமத்தால் அனைத்தையும் வெற்றிக் கொள்ளும் நாள். கடன் நிவாரணம் மற்றும் நண்பர் உதவியும் உண்டு.

**மகரம்:** கொடுக்கல் வாங்கல்களின்போது கவனமாக இல்லாவிட்டால் நட்டம் அல்லது இழப்பு ஏற்படும். வாயை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** உடல், மன நலத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். உங்கள் பெயர் அல்லது கௌரவம் கெட்டுப் போகும் செயல்களில் ஈடுபடாதீர்கள்.

**மீனம்:** வீண் விரயங்களால் நட்டங்கள், இழப்புகள் தோன்றும். தொலை தூரப் பயணங்களால் உடல் அசதி உண்டு.

**திதி:** சஷ்டி பி.ப.4.21 வரை பின் சப்தமி (தேய்)

**நட்சத்திரம்:** அவிட்டம் பி.ப.5.09 வரை பின் சதயம்

**யோகம்:** சித்த யோகம்

**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம் :** மு.ப. 5.50 – 6.50 மணிவரை

**ராகுகாலம் :** 10.20 – 11.50 மணிவரை

**எமகண்டம் :** 2.50 - 4.20 மணிவரை

**குளிகை :** 7.20 – 8.50 மணிவரை

**சந்திராஷ்டமம்:** கடக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்:** ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# வடக்கு - கிழக்கு இளைஞர்கள் திறமைகளை வெளிப்படுத்த வறுமை தடையாகவுள்ளது

## அங்கஜன் எம்.பி. விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தேசிய மற்றும் சர்வதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்த வறுமை நிலை தடையாகவுள்ளதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் றொசான் ரணசிங்கவுடன் குறித்த அமைச்சில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரை நேரடியாக சந்தித்து வடக்கு மாகாண இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத்துறை விருத்தி தொடர்பாக பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன்.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதைத் தடுக்க வேண்டியது எம் அனைவரதும் கடமை. அதனை தடுக்க அவர்களுக்கு உரிய பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அவர்களது பொழுதுபோக்கு நேரத்தை விளையாட்டுத்துறையின் பக்கமாக ஈர்க்கும்போது தவறான பாதையில் செல்வதில் இருந்து விலக்கிக்கொள்ள முடியும்.

நீண்ட கால யுத்த நிலைமைக்குப் பின்னர் இன்று வடக்கு மாகாண இளைஞர் யுவதிகள் விளையாட்டுத்துறையில் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

பாடசாலை மட்ட, கழக மட்ட, பல்கலைக்கழக மட்ட போட்டிகளிலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டப் போட்டிகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர்.

இருப்பினும், இந்த வீர வீராங்கனைகள் தமது உபகரணங்கள் மற்றும் பயிற்சி செலவுகளை தாமே பொறுப்பேற்க வேண்டிய நிலை காணப்படுகிறது. வறுமை நிலையில் உள்ளவர்கள் இதனால் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் போகின்ற நிலை காணப்படுகிறது.

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளுக்கு உரிய பயிற்சிகள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வீர வீராங்கனைகளையும் தேசிய அணிகளுக்குள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சரை கோரியுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

# அல்வாய் வடமத்தியில் வயோதிபரின் சடலம் மீட்பு

அல்வாய் வடமத்தி, அல்வாய் மாவிலங்கடி வீதியிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் (07) முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

வேதார்வளவு, வியாபாரி மூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுராமலிங்கம் (வயது81) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். மேற்படி வயோதிபர் மாவிலங்கடி வீதியில் 12.30 மணியளவில் விழுந்து கிடந்ததை கண்ட இளைஞர் ஒருவர் அவரை எழுப்ப முற்பட்ட சமயம் அவர் அசைவற்று காணப்பட்டதால் இவ்விடயம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றதுடன் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு மரண விசாரணை அதிகாரி இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

# புத்தளத்தில் காகங்கள் இறப்பு: காரணங்களை கண்டறிய ஏற்பாடு



புத்தளம் நகரில் பல காகங்கள் இறந்து கிடப்பதாக புத்தளம் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

காகங்கள் இறப்பதற்கான காரணங்களை கண்டறிவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

புத்தளம் நகரின் வானா வீதி ஏரிக்கு அருகில் நேற்றுமுன்தினம் (07) காலை முதல் காகங்கள் இறந்து வருகின்றன.

இது தொடர்பில் புத்தளம் மாநகர சபைக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறந்த காகங்களின் உடல் உறுப்பு களை பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி அறிக்கையை பெற்றுக்கொள்ள புத்தளம் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

# கடற்றொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் விநியோகம்

(வாழைச்சேனை செய்தியாளர்)



மட்டக்களப்பில் தெரிவுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் வழங்கும் நிகழ்வு நேற்று (08) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, பாலமீன்மடு மீனவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சுதாகரன் சியாந் கலந்துகொண்டார். இதன்போது முதற்கட்டமாக 86 மீனவர்களுக்கு தலா 75 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா, மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் நற்குணநாதன் பத்மநாதன் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் என்போர் கலந்துகொண்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட மீனவர்களுக்கான இலவச மண்ணெண்ணெய் விநியோகம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கட்டம் கட்டமாக தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுயானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

காட்டுயானையின் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இதிகஹவத்த பகுதியில் நேற்று (08) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை, இதிகஹவத்த பகுதியை வசிப்பிடமாக கொண்ட 53 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்த விவசாயி தனது விளைநிலத்தில் கொட்டிலில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது விளைநிலத்துக்குள் புகுந்த காட்டுயானையை துரத்துவதற்கு முற்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. உயிரிழந்த விவசாயியின் சடலம் எப்பாவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பருத்தித்துறையில் நகை திருட்டு

# இரண்டு மணி நேரத்தில் திருடனை பிடித்த பொலிஸார்

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் வீடு புகுந்து, ஐந்தரைப் பவுண் தங்கச் சங்கிலியை திருடிய நபரை 2 மணித்தியாலத்துக்குள் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்ததுடன் திருடப்பட்ட நகையையும் மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பமொன்று தேவை நிமித்தம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெளியில் சென்றுள்ளது. இதனை சாதகமாகப் பயன்படுத்திய திருடன் வீடு புகுந்து ஐந்தரைப் பவுண் தங்கச் சங்கிலி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து 2 மணித்தியாலத்துக்குள் மூன்றாம் குறுக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசியை உடனேயே விற்பனை செய்துள்ளார். இதன் மூலமாக பருத்தித்துறை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் சந்தேகநபரை இரண்டு மணித்தியாலங்களுக்குள் கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் திருடப்பட்ட தங்கநகை புதைத்து வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டது.

சந்தேகநபரை பருத்தித்துறை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண் சடலமாக மீட்பு

(கலஹா செய்தியாளர்)

கம்பளை, புபுரஸ்ஸ டெல்டா தோட்ட வடக்கு பிரிவில் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புபுரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை, புபுரஸ்ஸ டெல்டா தோட்ட வடக்கு பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஸ்வர்ணா (22 வயது) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பலத்த வானொலி சத்தத்துடன் பல மணி நேரமாக தொடர்ந்து குழந்தை ஒன்றின் அழுகுரல் சத்தம் கேட்டுக்கொண்டிருந்ததையடுத்து பிரதேசவாசிகள் சென்றுபார்த்த பொழுது தூக்கில் தொங்கிய தாயின் கால்களைபிடித்து கொண்டு ஒன்றரை வயது குழந்தை அழுவதைக் கண்டுள்ளனர்.

பின்னர் குறித்த பெண்ணை மீட்டு தோட்ட வைத்தியசாலையின் வைத்தியரிடம் காண்பித்தபொழுது அப்பெண் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட புபுரஸ்ஸ பொலிஸார் குறித்த பெண் தனது ஒன்றரை வயது மகனுக்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் ஒன்றினை மீட்டுள்ளனர். அதில் என் தங்கமே நீ ரொம்ப கவனம் அம்மை இனி வரமாட்டேன் என்று எழுதப்பட்டிருந்துள்ளது.

கடந்த புதன்கிழமை (07) பகல் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பான ஸ்தல விசாரணைகளை கம்பளை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் நந்தனி காந்திலதா மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பேராதனை வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புபுரஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜுன் 09ஆம் திகதி, வெள்ளிக்கிழமை


## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது ஏற்புடைய ஒன்றுதானா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் இரண்டு பொலிஸ் புலனாய்வாளர்கள் தமக்குத் தொல்லை கொடுக்கும் விதத்திலும், சந்தேகத்திற்கிடமான முறையிலும் நடந்து கொண்டதாகவும், அவர்களில் ஒருவர் தன்னைத் தாக்கியதாகவும், தொடர்ந்து இன்னுமொரு பொலிஸ் அலுவலர் கைதுப்பாக்கியைக் காட்டி தன்னை மிரட்டியதாகவும், கஜேந்திரகுமார் மனித உரிமைகள் ஆணையகத்தின் யாழ்ப்பாண இணைப்பாளருக்கு தொலைபேசி ஊடாக உடனடியாகவே முறையீடு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் கோரிய பிரகாரம் பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் வழங்கவும் அவர் சம்மதம் தெரிவித்திருந்தார். பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகிய நிலையில், அவற்றிற்கு சமுகமளிக்க வேண்டியிருந்ததால், அமர்வுகள் முடிவடையும் வரையில் வாக்குமூலம் வழங்குவதற்கு பொலிஸாரிடம் அவர் கால அவகாசமும் கோரியிருந்தார். குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸாரினால் தனது சிறப்புரிமை மீறப்பட்டிருக்கின்றது என்ற முறையீட்டையும் அவர் பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கவிருந்தார். இந்த விடயம் ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் கோபமாக தர்க்கப்படும் காணொளி ஊடகங்களில் வெளியானது. அதில் அந்த உத்தியோகத்தரை சம்பவ இடத்திலிருந்து வெளியேறுமாறு கஜேந்திரகுமார் எம்.பி. ஒருமையில் பேசுவதைக் காண முடிகிறது. இது ஏற்புடையது அல்ல. ஆனால், அந்த வார்த்தைப்பிரயோகம் சிங்கள மொழியை சரியாக அறிந்திராத காரணத்தினால் கஜேந்திரகுமாரால் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம் என்பது சிலரின் கருத்தாக இருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் என்ன காரணத்திற்காக அந்த இடத்திற்குச் சென்றார் என்பது குறித்தும் விசாரிக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது.

எவ்வாறாயினும், கைதுசெய்யப்பட்ட தினத்தன்று காலையில் சபாநாயகர், பிரதி சபாநாயகரிடம் இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து முறையிட்டிருந்த போதிலும், அவர்களின் வலியுறுத்தல்களையெல்லாம் மீறி இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இந்த அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அவரது சிறப்புரிமை அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருடைய சிறப்புரிமையையும் மதிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால், பாராளுமன்றத்தில் தங்கி நிற்கும் அரசாங்கம் பாராளுமன்றத்தை மதிக்காமல் நடந்திருக்கின்றது. பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள முடியாமல் ஓர் உறுப்பினர் அரசாங்க உத்தரவின் பெயரில் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றார் - கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். இதற்கு பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி அல்லது ஒட்டுமொத்த அமைச்சரவையும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பகிரங்கமாகவே அராஜகங்களில் ஈடுபட்டபோதிலும், அவர்களின் சிறப்புரிமை அவர்களைப் பாதுகாத்து வந்தது. மேர்வின் சில்வா அரசாங்கப் பணியாளர் ஒருவரை கயிற்றால் கட்டி வைத்த விவகாரத்தில் அவருக்கு கிடைத்த தண்டனை என்ன? பாராளுமன்றத்தில் சபாநாயகருக்கே மிளகாய்த்தூள் நீரை வீசி செங்கோலைப் பறித்து ஓட முயன்றவர்களுக்கு கிடைத்த தண்டனை என்ன? வரலாற்றில் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறி எதேச்சதிகாரம் செய்த எத்தனையோ பேர் கண்டும் காணாமலும் விடப்பட்ட நிலையில், கொலைக்குற்றவாளி போன்று கஜேந்திரகுமார் நடத்தப்பட்டமை ஏற்புடையதல்ல.

கஜேந்திரகுமார் எம்.பி. பாராளுமன்றத்தில் ஒழுங்குப்பிரச்சினையை எழுப்ப முன்னர் கைதுசெய்ய பொலிஸ் திணைக்களம் காட்டிய அக்கறையை ஏனைய பல விடயங்களிலும் காட்டினால் நாட்டின் சட்டம் ஒழுங்கு முன்னேற வாய்ப்புண்டு. இந்த விடயத்தை நோக்கும் எவருக்கும் இதற்குள் ஒளிந்திருக்கும் இனவாத சாயலை இலகுவில் கண்டுகொள்ள முடியும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ஒரே காரணத்திற்காக கஜேந்திரகுமார் மீது சட்டம் கேட்டுக்கேள்வியின்றி பாய்ந்துள்ளது என்பதே நிதர்சனம். தமிழர்களைப்பொறுத்தவரை இது அவர்களுக்கு புதுமையைத் தரவில்லை. இந்த அடக்குமுறையும் அவர்களுக்குப் புதிதல்ல. ஆனால், சட்டத்தை நிலைநிறுத்துவதாக காட்டுமிராண்டித்தனமாக எவரும் நடந்துகொள்ளக்கூடாது. அது இந்த தேசத்திற்கு அபகீர்த்தி. மக்கள் மன்றமான பாராளுமன்றத்திற்கும் அது அகௌரவத்தையே தரும்.

# ஆத்மீக ஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்கள்


கலீபதுல் குலபா முஹம்மத் ஸுஹூர் ஆலிம் பாரி


பேருவளை சீனன் கோட்டை பாஸிய்ய பெரிய பள்ளிவாசல்

**ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்களின் ஜனன தினத்தை முன்னிட்டு, வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை, சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 132ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவமும் கலீபத்துல் குலபா மௌலவி எம்.இஸட்.எம்.முஹம்மத் ஸுஹூர் ஆலிம் (பாரி) அவர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை (10) மாலை கலீபத்துஷ் சாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம்.றபீக் (பஹ்ஜி), எம்.எம்.ஸைனுல்ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு, இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

**பேருவளை பீ.எம்.முக்தார்**

அல்லாஹ்வின் அன்பர் அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைப் பேரர் அஷ் ஷெய்கு நூறுத்தீன் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம் (றழி) வட ஆபிரிக்காவில் கிமாரா என்ற ஊரில் ஹிஜ்ரி 593 ஷவ்வால் அல்லது துல்கஃதா மாதம் கி.பி. 1197 இல் பிறந்தார்.

சிறு வயதிலேயே கல்வியில் கவனம் செலுத்தி திருக்குர்ஆனை திறன்பட மனனம் செய்து தீனியத்தான கல்வியில் சிறந்து விளங்கிய அன்னார் தூனிஸ் நகரம் சென்று மார்க்க ஞானம் பெற்றார். சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று ஞானத்திலகமாக திகழ்ந்தார். அவர் அறிவு கடல்போல் விரிவடைந்தது. மேலும், ஆத்ம ஞானத்தில் அனுபவம் பெற நாடி பக்தாத் நகர் சென்றார். அங்கு மஹான் வாஸித்தி இமாம் (றஹ்) அவர்களை அணுகி ஆத்ம ஞான அறிவுகளைக் கேட்டுவந்தார். ஒரு நாள் ஷெய்கு வாஸித்தி இமாம், அபுல் ஹஸன் அலி நாயகத்தின் அந்தரங்கத்தை அறிந்து ''நீர் தேடும் காமிலான ஷெய்கு உமது நாட்டில் உமக்காக காத்திருக்கிறார். அங்கு போய் சேரும்'' என்று அறிவித்தல் கொடுத்தார். இதைக் கேட்டு அவர் தம் தாய்நாடு திரும்பினார்.

மெய் நிலை கண்ட ஞானியாகவும் பெரிய குத்பாகவும் உயர்வடைந்த மத சீலர் அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஷ் ஷாதுலி நாயகம் அவர்களின் ஊருக்கு அருகிலுள்ள மலை மீது தங்கியிருந்தார். அவர் யாரையும் தமது


எகிப்து நாட்டில் ஹுமைசராவில் அமைக்கப்பட்டுள்ள இமாம் ஷாதுலி நாயகம் (ரலி) அவர்களின் ரௌலா சரீப் (அடக்கஸ்தலம்)

சீடர்களாக்கிக் கொள்ளவில்லை. இப்னு மஷீஷ் (றஹ்) இமாம் அவர்கள் "நான் ஓர் ஈச்சம் மரம் வளர்க்கிறேன். அது பெரிய விருட்சமாகி பிற்காலத்தில் மக்கள் பயன் அடைவார்கள்" என கூறியிருந்தார். இது ஷாதுலி நாயகம் அவர்களின் மகத்துவத்தைப் பற்றி முன் அறிவிப்பாக கூறப்பட்டதாகும். தமது பரந்த ஞானம் மக்களுக்கு பயனளிக்கும் பொருட்டு அம்மெய்ஞானத்தைப் புகட்ட இமாம் ஷாதுலி நாயகத்தை எதிர்பார்த்திருந்தார். தாம் தேடும் குருநாதரை சந்தித்து ஷாதுலி நாயகம் குரு சேவையில் சில காலமும் ஈடுபட்ட பின்பு ஞான தீட்சை பெற்று ஷெய்கு அங்கு அவர்கள் ஆணைப்படி அனுஷ்டானத்தில் ஈடுபட்டார்.

ஷாதுலி இமாம் அவர்களுக்கு மக்கள் மத்தியிலே போய் (தஃவா) பிரசாரம் செய்யுமாறு மஹான் வாஸித்தி இமாம் (றஹ்) அவர்களினால் பணிக்கப்பட்டது. இந்நிலையில், ஷெய்குவிடமிருந்து விடைபெற்று அவர் உத்தரவுப்படி முதலில் ஷாதிலா சென்றார். ஆரம்பமாக ஷாதிலாவில் ஆத்மஞான போதனைகளைப் புரிந்தார். அதனால் ஷாதுலி என்ற பெயர் வந்ததாகவும் கூறுவதுண்டு. எனவே, அவர் ஏற்படுத்திய ஞானப் பாதைக்கும் ஷாதுலிய்யா தரீக்கா எனப் பெயர் வரலாயிற்று.

இஸ்லாத்தின் இதயத்தை இயக்கிவிட்டு புத்துயிர் அளித்ததால் நூறுத்தீன் (மார்க்கத்தின் சுடர்) என்ற பெயர் பெற்றார். மெய்ஞானி ஷாதுலி நாயகம் அவர்களின் ஞானப் பேருரைகள் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தன. ஷரீஅத்தை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும்படி மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார். அவரின் அற்புதக் கருத்துகளை கேட்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினார்கள். ஷாதிலாவில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு ஷெய்கின் சொற்படி தூனிஸ் சென்றார்.

இவ்வாறு பல ஊர்களுக்கும் சென்று ஷாதுலிய்யா தரீக்கா என்ற ஞானவழியை அமைத்து அதன் மூலம் மக்களை ஞானவான்களாக மாற்றினார்.

ஷாதுலி நாயகம் அவர்கள் புகழ் ஓங்குவதை பொறுக்க முடியாத சில பொறாமைக்காரர்கள் அவருக்கெதிராகப் பொய்ப்பிரசாரம் செய்தார்கள். அரசுக்கெதிராக மக்களை திரட்டுவதாக சுல்தானிடம் முறையிட்டார்கள். இதனால் ஷாதுலி இமாம் அவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. சுல்தானின் விசாரணைக்கு உட்பட்டார். பொய்க்குற்றச்சாட்டுகளை தமது தவ வலிமையால் தகர்த்து உண்மையை வெளிப்படுத்தி சுல்தான்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றார்.

ஷெய்காகச் செயலாற்றிய பின்பு குத்புல் அக்பராக உயர்ந்தார். வலிமார்களின் படித்தரங்களில் குத்பு என்பதே குத்புல் அக்பரின் கருத்து. கிலாபதுல் குப்ரா எனும் மேல் அதிகாரத்தைப் பெற்று திருநபி அவர்களின் கலீபதுல் அக்பராக கடமைபுரிந்தார். மாமேதை ஷாதுலி இமாம் அவர்கள் சில ஹிஸ்புகளைத்தவிர நூல் வடிவில் எந்தக் கித்தாபும் இயற்றவில்லை.

என்னுடைய நூல்கள் என் சீடர்களே என கூறிவிட்டார். அநேக ஞான ஆசிரியர்களை உருவாக்கினார். அந்தச் சீடர்கள் இயற்றிய நூல்கள் ஞான இரத்தினங்களாக உள்ளன. சீடர்களும் சீடர்களின் சீடர்களும் இமாம்களாகவும் குத்புகளாகவும் பிரகாசித்து ஷாதுலிய்யா ஞானப் பாட்டின் மூலம் இஸ்லாமிய ஞானத்தை உணர்ந்து உலகெங்கிலும் பரப்பினார்கள்.

அல்லாமா பூஸரி இமாம் (றஹ்) அவர்கள் கோர்வை செய்த புர்தா ஷரீப் ஒன்றே இதனைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

குருநாதர் நாதர் ஷாதுலி நாயகம் பல ஹஜ் கிரியைகளை செய்துள்ளார். கடைசியாக தங்கள் குடும்பத்தாருடனும் சீடர்களுடனும் ஹஜ் செய்யப்புறப்பட்டார். அபுல் அஜாயி என்ற சீடரிடம் மண்வெட்டியையும் மற்றும் சில பொருட்களையும் குறிப்பாக எடுத்துக் கொள்ளும்படி பணித்தார். அது பற்றி அறிய விரும்பிய சீடர்களிடம் நம்மில் யாராவது பிரயாணத்தின்போது இறந்துவிட்டால் அடக்கம் செய்யத் தேவைப்படும் என்று இமாம் ஷாதுலி நாயகம் அவர்கள் கூறினார்.

ஹஜ்ஜூக்குப் புறப்பட்டு ஈஜாப் பாலைவனத்திலுள்ள ஹுமைஸரா என்ற இடத்தை வந்தடைந்தார். அந்த அருமைச் சீடர் அபுல் அப்பாஸ் அஹ்மதுல் முர்ஸி (றழி) அவர்களை அருகில் அமரச் செய்து அரிய அறிவுரைகளை அளித்துவிட்டு அனைவரையும் அழைத்து தங்கள் கலீபாவாக அவரை நியமித்து அனைத்து அதிகாரங்களையும் அளித்துள்ளதாகவும் அறிவித்தார். பின்னர் அன்று இரவு முழுதும் அல்லாஹ்வை தியானிப்பதிலேயே ஈடுபட்டார். அப்படியே இறைவனடி சேர்ந்தார்.

ஹிஜ்ரி 656 ஷவ்வால் மாதம் கி.பி. 1258இல் இவ்வுலகை விட்டு நித்திய இல்லமாகிய மறு உலகை அடைந்தார்.

அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம் அவர்களுக்கு சுமார் 70க்கு மேற்பட்ட அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அன்னாருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர்.

இத்தரீக்கா வழி நடந்தவர்கள் மகோன்னத மகான்களாக, அரும் ஆத்ம ஞானியாக அறிவுத்துறையின் அருள் ஜோதிகளாக திகழ்ந்தார்கள். அவர்களுள் மாமேதை அபுல் அப்பாஸ் அல் முர்ஸி (றஹ்), மாமேதை இப்னு அதாஉல்லாஹ் அல் இஸ்கந்தரி (றஹ்), மாமேதை அப்துல் அளீம் அல் முன்திரி (றஹ்), மாமேதை அல் மகீனுதீன் அல் அஸ்மர் (றஹ்), மாமேதை யாகூதுல் அர்ஷ் (றஹ்), மாமேதை அபூ ஸைய்யிதுல் பூஸிரி (றஹ்) போன்றவர்கள் முக்கியமானவர்கள். அறிவுலக ஆசான்களாகிய இவர்கள் நூற்றுக்கணக்கான சமய நூல்களை அறிவுலகுக்கு அளித்தவர்கள்.

ஷாதுலி நாயகம் அவர்களின் காலத்துக்குப் பின் இஸ்லாமிய உலகில் தோன்றிய பேறிஞர்கள் பெரும்பாலானோர் புனித ஷாதுலிய்யா தரீக்கா வழி நடந்தவர்களே என்பதற்கு சரித்திரம் சான்று பகர்கின்றது. அல் ஹிகம், ஷவாகிதுல் ஹக், லதாயிபுல் மினன் போன்ற முக்கிய நூல்கள் ஷாதுலிய்யா தரீக்காவை சார்ந்த மகான்கள் அறிவுத்துறைக்கு அர்ப்பணம் செய்த பெரும் சொத்துகளாகும்.

### நக்கல் நமசிவாயம்

**ஏதும் பிரச்சினையெண்டா மக்கள் பார்லிமெண்ட் எம்.பியிடம் முறையிடப் போவார்கள்... ஆனால், அந்த எம்.பிக்கே பிரச்சினையெண்டால்...!**



### இன்றைய நாளில்...

- 1815 – வியன்னா மாநாடு முடிவடைந்தது. புதிய ஐரோப்பிய அரசியல் நிலப்படம் மாற்றமடைந்தது.
- 1903 – அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார். 40 பேர் கைதுசெய்யப்பட்டனர்.
- 1936 – யாழ்ப்பாண நகரசபைக் கட்டடத்தை இலங்கை மகாதேசாதிபதி சேர் ரெஜினால்ட் எட்வர்ட் ஸ்ரப்ஸ் திறந்துவைத்தார்.

குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு:

# தேரர்களால் தொடரப்பட்ட வழக்கு செப்டெம்பர் 14இற்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு நிருபர்)

குருத்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



இவ்வழக்கானது, நேற்று (08ஆம் திகதி) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில், கடந்த 12.06.2022 திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, புத்தர் சிலையொன்றை நிர்மாணிப்பதற்கும் அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்துக்குரிய விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்தாலோக நற்பணி மன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயகரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில், மக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்க முற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும் பொதுமக்களோடும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல்தென்ன ஆரண்ய விகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டவர்களை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்தனர். இவ்வாறு பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைவாக கடந்த 02.09.2022அன்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், குறித்த விசாரணைகளைத் தொடர்ந்து பொலிஸாரால் 20.09.2022 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் B/688/2022 என்னும் வழக்கிலக்கத்தில் குறித்த வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

குறித்த வழக்கானது நேற்று (08ஆம் திகதி) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதவான் குறித்த வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்தோடு, இந்த வழக்குடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் அடுத்த தவணையின்போது மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதவானால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சிரேஷ்ட சட்டத்தரணிகளான கெங்காதரன், பரஞ்சோதி, சுதர்சன் ஆகியோர் உட்பட நீதிமன்றுக்கு வருகைதந்த சட்டத்தரணிகள் அனைவரும் ரவிகரன், சிவநேசன், ஜூட்நிக்சன் ஆகியோருக்கு ஆதரவாக மன்றில் முன்னிலையாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com


# வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள வயோதிபர் தொடர்பில் தகவல் கோரல்

(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி கோரியுள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் அண்மையில் சேர்க்கப்பட்ட குறித்த வயோதிபர் சிங்கள மொழி பேசுபவர் என்பதுடன், தன்னை குணபால மென்டிஸ் என அறிமுகப்படுத்தியுள்ளார். எனினும், இவர் தொடர்பில் எவ்வித மேலதிக தகவலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல சிகிச்சைகள் பிரிவின் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த வயோதிபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையின் உளநலப் பிரிவுடனோ அல்லது வவுனியா பொது வைத்தியசாலையின் உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.சுதாகரன் தொலைபேசி இலக்கம் 071 432 3585, உளநலப் பிரிவு 024 222 7784, 12ஆவது விடுதி இலக்கம் 024 222 2762, 024 222 2262 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடல் யாழில்

(யாழ். நிருபர்)

பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகளும் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் தொடர்பாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் இன்று (09) காலை 09 மணி தொடக்கம் ஒரு மணிவரை குழு கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சுகாதாரம், கல்வி, மதத் தலைவர்கள், பொலிஸ், தனியார் கல்வி நிலைய நிறுவனங்கள், பெற்றோர், மாணவர்கள் போன்றோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கணித கற்றல் உபகரணத் தயாரிப்பு போட்டிப் பரிசளிப்பும் கௌரவிப்பும்







கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித மன்றத்தால் நடத்தப்பட்ட கணித கற்றல் உபகரணத் தயாரிப்பு போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் (07ஆம் திகதி) கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

தனது 41 வருட கல்விச் சேவையை நிறைவு செய்து எதிர்வரும் 22ஆம் திகதியுடன் அரச பணியிலிருந்து ஓய்வுபெறும் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனின் மணிவிழாவையொட்டி ஆசிரிய கலாசாலை சமூகத்தினர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர். கௌரவிப்பு உரையை கலாசாலை பிரதி அதிபர் க.செந்தில்குமரன் ஆற்றினார். முத்து இராதாகிருஷ்ணன் தான் வெளியிட்ட நூல்களின் ஒரு தொகுதியை கலாசாலை கிருஷ்ண படிப்பகப் பொறுப்பு விரிவுரையாளர் வே. சேந்தனிடம் கையளித்தார்.

# இரு ஆலயங்களை உடைத்து நகை, பொருட்கள் கொள்ளை

## லுணுகலையில் பொலிஸார் விசாரணை

எம்.செல்வராஜா

பதுளை, லுணுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு பகுதிகளில் ஆலயங்கள் உடைக்கப் பட்டு உண்டியல், அம்மன் தாலி உள்ளிட்டவைகள் களவாடப்பட்டுள்ளன.

எல்டராடோ தோட்டத்தில் ஸ்ரீ கன்னி மாரியம்மன் பத்தினி ஆலயம் உடைக்கப்பட்டு அம்மன் சிலைகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த 3 தாலிகள், தாலிபொட்டுகள், கண் மலர்கள், உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளன என்று லுணுகலை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், லுணுகலை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தாலி, தாலி பொட்டு, உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளன.

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். லுணுகலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# பரீட்சை கண்காணிப்பாளர் கடமையின்போது மரணம்

(கண்டி செய்தியாளர்)

பரீட்சை மண்டபத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பரீட்சை கண்காணிப்பாளர் ஒருவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று வத்துகாமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வத்துகாமம் பாலிகா வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஒருவரே இவ்வாறு மரணடைந்துள்ளார். கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய கே.ஜே.சில்வா என்பவரே இவ்வாறு சுகயீனமற்று மரணமடைந்ததாகத் தெரிய வருகிறது.

மேற்படி பரீட்சை மண்டபத்தில் பரீட்சை ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் மேற்படி பரீட்சை கண்காணிப்பாளர் திடீர் சுகயீனமுற்று வத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இவ்வாறு மரணம் சம்பவித்திருக்கலாம் எனப் பொலிஸார் கருதுகின்றனர்.



*1963ஆம் ஆண்டு தொடக்கம் 1975ஆம் ஆண்டு வரை மாத்தளை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் ஆசிரியராகவும் சாரணர் சேவையின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றி மாத்தளை ஸாஹிராக் கல்லூரி மாணவர்களின் மற்றும் மாத்தளை மக்களின் நன் மதிப்பை பெற்ற ஆசிரியர் ஈ. குழந்தை வேலுவின் நூறாவது பிறந்த தின விழா மட்டக்களப்பு சுற்றுலா விசேட மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. மாத்தளை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரும் இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரல் ஸவீர் தலைமையில் மட்டக்களப்புக்கு சென்ற குழுவினர் ஆசிரியரை பாராட்டி கௌரவித்தனர். (மாத்தளை செய்தியாளர்)*

யாழிலிருந்து காலிக்கு நடைபயணம்

# சாதனைக்கு தயாராகும் மலையக இரட்டையர்கள்



(ஆ.ரமேஸ்)

யாழ்ப்பாணம் தொடக்கம் காலிவரை 566 கிலோ மீற்றர் தூரத்தை மூன்று நாட்களில் ஓய்வு எடுக்காமல் நடந்து உலக சாதனை நிலைநாட்ட மலையகத்தைச் சேர்ந்த இரட்டையர்களான இரு இளைஞர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை தமது சாதனை நடை பயணத்தை யாழிலிருந்து தொடரவுள்ளனர்.

பொகவந்தலாவை கொட்டியாக்கலை தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.ஏ.விக்னேஷ்வரன் மற்றும் தயாபரன் ஆகிய இரட்டை சகோதரர்களே இந்த சாதனைப் பயணத்தை தொடரவுள்ளனர்.

இந்த சாதனை பயணத்தை நோக்கி பயணிக்கவுள்ள இவர்கள், உலக சாதனையில் இடம் பிடிப்பதற்கான அனுமதி கடிதம் இவர்களுக்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இதற்கு முன்னர் இவர்கள் யாழிலிருந்து காலி வரையிலான 566 கிலோமீற்றர் தூரத்தை நான்கு நாட்கள் நடந்தும் புத்தளத்திலிருந்து சீதுவை வரையிலான 147 கிலோமீற்றர் தூரத்தினை வெறுமனே ஆறு மணி நேரத்திலும் பயணித்து சாதனை படைத்துள்ளதுடன், கொழும்பிலிருந்து பொகவந்தலாவை வரையிலான 184 கிலோமீற்றர் தூரத்தை 18.5 மணித்தியாலங்களில் நடந்து சாதனை படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மரத்துடன் வேன் மோதி நானுஓயாவில் விபத்து

## ஒருவருக்கு காயம்

(டி.சந்ரு)



நுவரெலியாவிலிருந்து நானுஓயா டெஸ்போட் வழியாக கொழும்பு நோக்கி பயணித்த வேன் ஒன்று நுவரெலியா - தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் நானுஓயா கிரிமிட்டிய பகுதியில் விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து நுவரெலியா சென்றுவிட்டு மீண்டும் கொழும்பு நோக்கி செல்லும் வழியிலேயே குறித்த வேன் பாதையை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றில் மோதி நேற்றுமுன்தினம் புதன்கிழமை 11 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இடம்பெற்றபோது, குறித்த வேனில் 8 பேர் பயணித்துள்ள போதிலும் ஒருவருக்கு மாத்திரம் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் ஆரம்ப சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் வேறொரு வேன் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வேன் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து நேர்ந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5138 | ரூ. 11,295,097.00 | F | 4 3 0 8 8 7 |
| கொவிசெத | 3380 | ரூ. 61,147,365.20 | U | 15 16 50 77 |
| ஜாதிக சம்பத | 1593 | ரூ. 12,065,057.60 | வெற்றி இலக்கினம் | 0 7 8 5 5 7 |
| தன நிதானய | 1168 | ரூ. 93,652,968.80 | X | 33 44 51 65 |
| ராசி சுப பலன் Handahana | 447 | ரூ. 3,194,186.00 | வெற்றி இலக்கினம்: மிதுனம்; விசேட இலக்கினம்: மிதுனம் | 20 24 34 40 |
| Mega POWER | 1486 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 327,691,562.00 | S (சுப்பர் இலக்கம் 13) | 44 49 66 72 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டறிந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே அரசின் பொறுப்பு

## ரிஷாத் எம்.பி. சபையில் தெரிவிப்பு



பொருளாதார வீழ்ச்சிக்கான அடிப்படைப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கு முதலில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று தெரிவித்த முன்னாள் கைத்தொழில், வர்த்தக அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், சிறு ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோரை ஒன்றுகூட்டி, கலந்தாலோசனை நடத்தி பிரச்சினைகளை இனங்காண வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (07) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைப் பொறுப்பேற்றதிலிருந்து நாடு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டதோடு பொருளாதார அழிவையும் சந்தித்தது. தொழில்கள் இல்லாமலாக்கப்பட்டன. கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஒட்டுமொத்தத்தில் நாட்டையே அதலபாதாளத்தில் தள்ளிய ஜனாதிபதியாக அவரை நாங்கள் நோக்குகின்றோம்.

தற்போதைய கைத்தொழில் அமைச்சர் திறமையானவர், அறிவார்ந்தவர், முற்போக்குச் சிந்தனை கொண்டவர். அவரின் மீது நான் நல்லெண்ணம் கொண்டிருக்கின்றேன். அவரைச் சந்திக்கும்போதெல்லாம் கைத்தொழில்துறை வளர்ச்சி தொடர்பான எனது ஆலோசனைகளைத் தெரிவிப்பது வழக்கம்.

கோட்டா ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர், சுமார் 20 சதவீதமான சிறு ஏற்றுமதியாளர்கள், சிறு கைத்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்தத் துறையில் ஈடுபட்டவர்கள் பல இன்னல்களையும் - கஷ்டங்களையும் எதிர்நோக்கினர்; தற்போதும் எதிர்நோக்கி வருகின்றனர். ஆட்சியாளர்கள் செய்யும் தவறுக்காக அவர்கள் அனுபவிக்கின்றனர்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பல்வேறு தவறுகளைச் செய்தார் எனக் கூறுகின்றனர். எனினும், அப்போது அவரை அமைச்சராக்கி, பின்னர் ஆளுநராக்கி, அமைச்சரவை அந்தஸ்தையும் அவருக்குப் பெற்றுக்கொடுத்தனர். இவ்வாறு அழகுபார்க்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் 3 ட்ரில்லியன் நாணயத் தாள்களை அச்சிட்டார். அப்போது நாங்கள் இதனை எதிர்த்துக் குரல்கொடுத்தபோது "துறைசார்ந்தவர்கள் அதனைச் சரியாக செய்கின்றார்கள். நீங்கள் பின்னர் இதைப்பற்றி அறிந்துகொள்வீர்கள்" என்று கூறினர். கப்ரால் நாட்டை நாசமாக்கி, முதலீட்டாளர்களை நாட்டுக்கு வரவழைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தினார். அந்தக் குறுகிய காலத்தில் நாடு பொருளாதார சீரழிவுக்குள்ளாகி இனவாதம் தலைவிரித்தாடியது. மத்திய கிழக்கு முதலீட்டாளர்களை இனவாதக் கண்ணோட்டத்தோடு பார்த்தனர். ஊடகங்கள் வாயிலாக இனவாத செயற்பாடுகளைப் பரப்பினர். நாடு குட்டிச்சுவராகியது. எதிர்காலத்தில் இதனை சீரமைக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கும் ஆட்சியாளருக்கும் உள்ளது. புதிய ஜனாதிபதி 2048 தொடர்பில் இப்போது கனவு காண்கின்றார். அதனைக் கூறிக்கொண்டு நாம் இருக்கின்றபோது, தொழிற்சாலைகள் இங்கு மூடப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைக்கு நிவாரணம் காண்பதை விடுத்து, நீண்டகாலத்துக்குப் பின்னர் நாம் அதனை அடைந்துவிடுவோம் எனப் பேசுவது வியப்பாக உள்ளது. அது மாத்திரமின்றி, இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கு பேரழிவையே ஏற்படுத்தும்.

தற்போது பாரிய ஆடைத்தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. முதலீட்டாளர்கள் பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் இன்னோரன்ன நாடுகளுக்கு படையெடுத்துக்கொண்டிருக்கின்றனர். இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளது. அவர்களை தொடர்ந்தும் இந்த நாட்டில் தொழில்களை செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கி, அதற்கான சூழலையும் - மனோவலிமையையும் ஏற்படுத்தி உத்தரவாதத்தை வழங்குங்கள். தற்போது, இயங்கிக்கொண்டிருக்கின்ற கைத்தொழிற்சாலைகளையாவது தொடர்ந்தும் இயங்க வைப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

உதாரணமாக புத்தளத்தில் குறிப்பாக, மதுரங்குளியில் 170 தும்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. சுமார் 510 வாகனங்கள் இந்தத் துறைக்காக சேவையில் ஈடுபடுகின்றன. 1,360 பேர் இந்தத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். மறைமுகமாக இந்தத் தொழிலுடன் தொடர்புபட்ட 3,500 பேர் இருக்கின்றனர். தும்பு மற்றும் தும்புச் சோறு ஆகியன சுமார் 2 மில்லியன் டொலர் வரையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு பிரம்மாண்டமான தும்புத் தொழிலில் ஈடுபாடு காட்டுபவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. தும்புக்கான சரியான விலை நிர்ணயிக்கப்படவில்லை. சவூதி அரேபியா கூட பல மில்லியன் ரூபா பெறுமதியான தும்பைக் கோரி நிற்பதாக பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது. ஆனால், உற்பத்தியாளர்கள் இதனை ஏற்றுமதி செய்ய முடியாது திண்டாடுகின்றனர். எனவே, இந்த விடயத்தில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் மருதமுனை, பாலமுனை, குருநாகல் போன்ற இடங்களில் நெசவுத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருக்கின்றன. வியாபார மாபியாக்கள் இதற்குத் தடையாக உள்ளனர். எனவே, இந்த விடயத்திலும் கூடிய கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் உரையாற்ற வருகை தரவிருந்த கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பியின் திடீர் கைது தொடர்பிலும், அவரது சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பிலும் எனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றேன்" என்றும் தெரிவித்தார்.






கொழும்பு -13, கதிரேசன் வீதி, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர்த்திருவிழா சிவஸ்ரீ.சர்வேஸ்வர ஸ்ரீ காந்தன் குருக்கள், சிவஸ்ரீ வெ.ஜெபந்தன், சிவஸ்ரீ சிநேசன் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற பூஜையைத் தொடர்ந்து ஆரம்பமானது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, மனோ கணேசன் எம்.பி. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(படப்பிடிப்பு எம். நசார்)

# கண்டியில் நூல் வெளியீட்டு விழா






(இக்பால் அலி)

இலங்கையின் பிரபல முன்னணி நாவலாசிரியரும் கவிஞரும் சமூக சிந்தனையாளருமான அருட்பணி பெனி எழுதிய "பெயின் ஸன்ஸ் பெயின்" (வலியற்ற வலி) என்ற ஆங்கில நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சி காவேரிக் கலா மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் நூல் பதிப்பாளருமான அருட்பணி வண. பிதா டி. எஸ். யோசுவா தலைமையில் கண்டி சத்தியோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேபாள நாட்டின் தொழு நோய்ப் பணியின் தேசிய இயக்குநர் கண்டல், இலங்கையின் யேசு சபையின் மாநிலத் தலைவர் வணபிதா ஆஞ்சலோ சுஜீவா, நரம்பியல் மருத்துவர் ஸ்வாஸ் பாரல், இந்தியாவின் பிரைட்டர் ஃபியூச்சர் நிறுவனத்தின் இயக்குநர் பரீஸ்போகுலா விக்டர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையின் தொழுநோயாளர் மக்கள் அமைப்பின் தலைவர் கே. ஜி. அமரசிங்கவிடமிருந்து நூலின் முதல் பிரதியை பிரதம அதிதி பெற்றுக்கொண்டார்.

இரு அமர்வுகளாக நடைபெற்ற இந்நிகழ்வில் "தொற்றுநோய் குறித்த விழிப்புணர்வில் பத்திரிகைகளின் பங்களிப்பும், நாவலின் அடிப்படையில் விழிப்புணர்வை பரவலாக்க எதிர்காலத் திட்டங்களும்" என்ற தலைப்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இறுதி அம்சமாக நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## ஆலயத்தில் திருட்டு:

# சந்தேக நபரை மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்த மக்கள்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை, கந்தேநுவர மேற்பிரிவு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தை உடைத்து தங்க நகைகள், உண்டியல் என்பவற்றைத் திருடிச்சென்ற சந்தேக நபர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று (08) இடம்பெற்றுள்ளது.

கந்தேநுவர மேற்பிரிவு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தின் மூலஸ்தான கதவை நேற்று முன்தினம் 7 ஆம் திகதி உடைத்து உள்ளே சென்ற திருடன் ஆலயத்திலுள்ள அம்மன் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த தங்கத் தாலி, பொட்டு மற்றும் உண்டியல் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று (08) காலை ஆலய பூசகர் பூஜை வழிபாட்டுக்காக ஆலயத்தைத் திறந்து உள்ளே சென்ற போது ஆலயம் உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக பூசகர் ஆலய நிர்வாகிகளுக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து உடன் செயற்பட்ட நிர்வாகத்தினர் கையடக்கத் தொலைபேசிமூலம் பிரதேச மக்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவித்துள்ளனர். திருடனைத் தேடி தீவிர நடவடிக்கைகளில் இறங்கியபோது கந்தேநுவரவிலிருந்து கொழும்புக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்ட ஒருவர் பயணத்தை இடைநிறுத்திக்கொண்டு திருடனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கையில் பையுடன் பதுங்கிய நிலையில் நுவரெலியா பஸ் நிலையத்தில் காத்திருந்ததைக் கண்ணுற்ற குறித்த நபர் ஆலய நிருவாகத்தினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சடுதியாக அவ்விடத்துக்குச் சென்ற ஆலய நிருவாகத்தினரும் இந்து இளைஞர் மன்றத்தினரும் சந்தேக நபரை மடக்கிப் பிடித்து கண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். விசாரணைகளை மேற்கொண்ட கண்டி பொலிஸார் சந்தேக நபரை குறித்த களவாடப்பட்ட பொருட்களுடன் கந்தேநுவர பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (08.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 189.0321 | 200.8295 |
| கனேடியன் டொலர் | 212.3635 | 225.1073 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.2584 | 42.3828 |
| யூரோ | 304.7190 | 321.6396 |
| ஜப்பான் யென் | 2.0361 | 2.1465 |
| சிங்கப்பூர் டொலர் | 210.7369 | 223.0812 |
| ஸ்ரேலிங் பவுன் | 354.8732 | 373.3916 |
| சுவிஸ் பிராங் | 311.6100 | 331.1495 |
| ஐ.அ. டொலர் | 285.6900 | 298.9191 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 771.7488 |
| குவைட் | குவைட் தினார் | 945.5936 |
| ஓமான் | ஓமான் றியால் | 755.7233 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.8388 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.5896 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.2182 |

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையை

# வினைத்திறன் மிக்க அமைப்பாக மாற்றுவதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆதரவு



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையை வினைத்திறன் மிக்க அமைப்பாக மாற்றுவதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆதரவு வழங்கவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திட்ட அமுலாக்க ஆய்வறிக்கையை அதன் தலைவர் சனத் நிசாந்த, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி டெட்சுயா யமடாவிடம் அண்மையில் கையளித்தார்.

நாட்டில் 3.5 மில்லியன் (இலங்கை சனத்தொகையில் 15% மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதுடன் துப்புரவேற்பாட்டு செயற்பாடுகளுக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் கடந்த 30 வருடங்களில் 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி பங்களிப்புச் செய்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திட்ட அமுலாக்கத்தில் வளமான அனுபவங்களைப் பயன்படுத்தி செயலாக்கத்திறனை மேலும் மேம்படுத்தும் நோக்கில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் கூட்டிணைந்த கணக்கெடுப்பொன்றை நடத்தியிருந்தது.

இலங்கையில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைகளின் அபிவிருத்திக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பான் அரசாங்கம் வழங்கிய உதவிகளையிட்டு சபையின் தலைவர் சனத் நிசாந்த பாராட்டினார்.

இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ அமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பல்வேறு செயற்பாடுகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆதரவளிக்குமென நம்புவதாக சபையின் பொது முகாமையாளர் கலாநிதி வசந்தா இலங்கசிங்க தெரிவித்தார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் பரிந்துரைகளை செயற்படுத்துவது திட்ட முகாமைத்துவ திறனை மேலும் மேம்படுத்தும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையை திறமையான பயன்பாட்டு நிறுவனமாக மாற்றுவதற்கு ஆதரவளிப்பதில் தாங்கள் மகிழ்ச்சியடைவதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி டெட்சுயா யமடா தெரிவித்தார்.

# பிரதேச செயலகங்களில் கடவுச்சீட்டுக்கான கைவிரல் அடையாள பதிவு முறைமை

## 15ஆம் திகதிக்குப் பின்னரே நடைமுறைச் சாத்தியம்

(சாவகச்சேரி நிருபர்)

பிரதேச செயலகம் ஊடாக கடவுச்சீட்டுக்கான கை விரல் அடையாளம் பதிவுசெய்யும் முறைமை எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னரே நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக பிரதேச செயலகத்தில் உள்ள துறைசார் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக கடவுச்சீட்டுக்கான விரல் அடையாளங்களைப் பதிவு செய்து சிரமங்களின்றி கடவுச்சீட்டுக்களைப் பெறும் நடைமுறை தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள துறைசார் அலுவலக உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர்கள் மேற்படி தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;,

கடவுச்சீட்டுகளுக்கான கை விரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்கு யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், குறித்த செயற்பாடு இதுவரை நடைமுறைக்கு வரவில்லை.எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது நடைமுறைக்கு வரும் பட்சத்தில் கடவுச்சீட்டுக்கு இணையவழி ஊடாக விண்ணப்பிப்பவர்கள் திணைக்களமூடாகத் தகவல் கிடைத்த பின்னர் பரிந்துரைக்கப்பட்ட பிரதேச செயலகங்களுக்குச் சென்று தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ய முடியும் என அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

# புளியந்தீவில் மர நடுகை நிகழ்வு



(வாழைச்சேனை செய்தியாளர்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் ரிதம் சனசமூக நிலையம், ரிதம் இளைஞர் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் புளியந்தீவில் வியாழக்கிழமை(08) இடம்பெற்றன.

ரிதம் சனசமூக நிலையத்தின் உபதலைவர் பி.திருச்செல்வம் தலைமையில் அமரர் பெரியதம்பிப் புலவர் பூங்காவில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் நா.மதிவண்ணன், ரிதம் சனசமூக நிலையத் தலைவரும் கிழக்குப் பல்கலைக்கழகப் பிரதி உபவேந்தருமான வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரம், மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டி.டாமராஜ், செரி நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் நிரோசன், ஆனைப்பந்தியான் சமூக நற்பணி மன்றத் தலைவர் மு.துதீஸ்வரன், சனசமூக நிலையச் செயலாளர் மே.துதிகரன், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ரிதம் இளைஞர் கழகம் மற்றும் ரிதம் சனசமூக நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க செரி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலையில், உலக சுற்றாடல் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக குறித்த மரநடுகை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, குறித்த பெரியதம்பிப் புலவர் பூங்காவை ரிதம் சனசமூக நிலையத்தினரால் பராமரிப்பு செய்வதற்கான கையளிப்பு செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலையை வந்தடைந்த எம்எஸ் எம்பிரஸ் சொகுசுக் கப்பல்







(கிண்ணியா செய்தியாளர்)

இந்தியாவின் முதல் சர்வதேச சொகுசு கப்பலான எம்எஸ் எம்பிரஸ் திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தை வியாழக்கிழமை(08) வந்தடைந்தது.

இந்திய மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால 05ஆம்திகதி திங்கட்கிழமை கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இதன்படி, சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பலானது திருகோணமலையை வந்தடைவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாடு செய்திருந்ததுடன் அவர் தலைமையில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், திருகோணமலை கிழக்கு கடற்படை கட்டளை தளபதி, பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.

மேலும், அதில் வருகை தந்த பயணிகளுக்கு திருகோணமலையில் காணப்படும் சுற்றுலாத் தலங்களை பார்வையிடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன. கப்பல் பயணத்துக்காக இலங்கையில் பொது விற்பனை முகவராகவும் துறைமுக முகவராகவும் Advantis நியமிக்கப்பட்டுள்ளது.



உற்பத்தித்திறன் போட்டி தொடர்பாக நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்வு புதன் கிழமை(07) சாய்ந்தமருதில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வைத்தியர்களான ஏ.எல்.அஜ்வத், எம்.எச்.கே.சனூஸ்பீ, ஜி.டானியல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.புஹாது உட்பட சாய்ந்தமருது பிரதேச செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஆர்.ஜெஸீலா, எம்.ஏ.ஷிபா ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். இந்நிகழ்வில் அம்பாறை பிரதேச செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.விஜயகுமார் வளவாளராகக் கலந்துகொண்டார். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)





சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரநடுகை மற்றும் சிரமதான நிகழ்வு தம்பலகாமம் கல்மெட்டியாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வியாழக்கிழமை(08) இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற இந்நிகழ்வில் மரங்கள் நட்டு வைக்கப்பட்டன. இதன்போது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)





சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு சிரமதான நிகழ்வு அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் அதிபர் எம்.எம்.ஹஸன் தலைமையில் வியாழக்கிழமை(08) இடம்பெற்றது. இதன்போது தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் எம்.ஏ.சி.றக்கீப், நிர்வாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்பக் கல்லூரி பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சுற்றுச்சூழலை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)





உலக சுற்றுச் சூழல் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் நீர் நிலைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் தூய்மையாக்கல் விழிப்புணர்வு தொடர் நிகழ்வு புதன்கிழமை(07) இடம்பெற்றது. அந்தவகையில், கதிரவெளி தாமரை வில்லுக்குளத்திலிருந்து பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் உக்காத திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பிரதேச பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர். (மட்டக்களப்பு செய்தியாளர்)

# பிரதிப் பிரதம செயலாளர் மன்சூருக்கு சொந்த மண்ணில் கௌரவிப்பு விழா

-பைஷல் இஸ்மாயில்-



கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) தேசமான்ய ஆதம்பாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவும் 'மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை' எனும் நூல் வெளியீடும் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளன. இவ்விழாவையொட்டி அவர் பற்றிய சிறு பார்வை..!

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த உதுமாலெவ்வை ஹாஜியார் ஆதம்பாவா - அலியார் லெவ்வை பாத்தும்மா ஆகியோருக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தவர் ஆதம்பாவா மன்சூர்.

இவர் சம்மாந்துறை தாறுல் உலும் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரக் கல்வியையும் யாழ். பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியையும் கற்றார்.

1989ஆம் ஆண்டு நிர்வாகமானிப் பட்டத்தை முதற்தரத்திலேயே சித்திபெற்று சிறந்த ஆளுமையுள்ளவராகத் திகழ்ந்ததுடன், 2009ஆம் ஆண்டு பொது நிர்வாக முதுமானிப் பட்டத்தையும் பெற்றார்.

அம்பாறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு சம்மாந்துறையில் வசிக்கும் தேசமான்ய ஆதம்பாவா மன்சூர், 1984ஆம் ஆண்டு உதவி ஆசிரியராக முதல் நியமனத்தைப்பெற்று பண்டாரவளை ஹீல்ஓயா முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது ஆசிரிய பணியை ஆரம்பித்தார். 1988ஆம் ஆண்டு சொந்த ஊரான சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த நிலையில், முகாமைத்துவமும் தொழிலாளர் செயற்பாடுகளும் பற்றிய 10ஆயிரம் சொற்கள் கொண்ட ஆய்வு நூல் ஒன்றை எழுதி வெளியிட்ட பெருமையும் இவருக்குண்டு.

06 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், 1991ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் முதலாவது நியமனத்தைப் பெற்று சொந்த ஊரிலேயே பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, வவுனியா வெல்கல செட்டிக்குளம் பிரதேச செயலாளராகவும் அம்பாறை கமநல ஆணையாளராகவும் திருகோணமலை கமநல ஆணையாளராகவும் பொத்துவில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கல்முனை உதவிப் பிரதேச செயலாளராக



உதுமாலெவ்வை ஆதம்பாவா



அலியார் லெவ்வை பாத்தும்மா

இருந்த காலப்பகுதியில் சாய்ந்தமருது உப பிரதேச செயலகத்திலும் கடமையாற்றினார். 1995ஆம் ஆண்டு காதர் மீராசாய்வு பாத்திமா றிசானா என்பவரை கரம் பிடித்த இவருக்கு 02 ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர்.

இந்நிலையில், சாய்ந்தமருது உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கு பல நகர்வுகளை முன்னெடுத்து 2001.02.04ஆம் திகதி பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இது தரமுயர முழுக் காரணமாக இருந்தவர் இவர் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு உள்வாங்கப்பட்ட இவர், நீதி அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு போன்ற அமைச்சுகளின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பல்வேறு சமூக சேவைகள், அமைப்புகளில் பல பதவிகளை வகித்துக்கொண்டு மக்களுக்கு நன்மைதரும் விடயங்களை இற்றைவரை செய்தும் வருகின்றார். இதன் நிமித்தம் தேசமான்ய, தேசகீர்த்தி, சாமசிறி மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் போன்ற கௌரவப் பட்டங்களும் இவருக்கு கிடைக்கப்பெற்றன. குறிப்பாக, 3 மாதங்களுக்குள் இலங்கை அபிவிருத்தி நிர்வாகத்துக்கான பொது நிர்வாகப் பயிற்சியை பூர்த்தி செய்துள்ளதுடன் பல்வேறுபட்ட தலைமைப் பதவிகள், அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிகள் என பல பதவிகளில் இருந்த காலப்பகுதியில் அத்துறைசார்ந்த நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளில் நிலவுகின்ற குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து அதன் முன்னேற்றப் பாதைக்கும் -அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

39 வருட அரச சேவைக் காலத்தில் 32 வருடங்கள் இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு பதவிகளில் இருந்த இவர், தற்போது இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்திலுள்ள நிர்வாக அதிகாரியாகவும் தேசிய ரீதியில் 12ஆவது இடத்திலும் கிழக்கு மாகாணத்தில் முதலாவது இடத்திலும் உள்ளார். இவர், கடந்த 2022.01.07ஆம் திகதி முதல் இற்றைவரை கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து தனது பணியை முன்னெடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




சம்மாந்துறை சாதனையாளர்களை வாழ்த்தும் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாபெரும் விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், மட்டக்களப்பு மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி, மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# முறைகேடுகளை கண்டறிவதற்கு சுயாதீனமான சட்ட அதிகாரியொருவரை இணைத்துக்கொள்க

## கோப் குழுவின் தலைவர் அறிவுறுத்தல்







புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தில் இடம்பெற்ற அனைத்து முறைகேடுகளையும் கண்டறிவதற்கு சுயாதீனமான சட்ட அதிகாரியொருவரை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளுமாறு கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டம் கடந்த 06ஆம் திகதி கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கடந்த மே 12ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் (கோப் குழு) புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்யப்பட்டது. இதன்போதே மேற்கண்ட அறிவுறுத்தலை கோப்குழு தலைவர் வழங்கினார்.

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்படுவது இது மூன்றாவது தடவையாக அமைகின்றபோதும் அதில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படாமை குறித்து கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக பொது மக்களிடமிருந்து பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அகழ்வு செய்யப்பட்ட நிலத்தை முறையாகப் புனரமைப்பு செய்யாமை கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம், அகழ்வு செய்யப்பட்ட காணியை புனரமைப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்படாமை கோப் குழுவின் தலைவரினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. போதிய நிதி இல்லாததால், அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலங்களை சீரமைக்கும் பணியை மேற்கொள்ள முடியவில்லை என அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். அகழ்வு செய்யப்பட்ட நிலத்தை சீரமைக்க வசூலிக்கப்படும் கட்டண வீதம் போதுமானதா என்பதை ஆய்வு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

**உரிமம் வழங்குவது தொடர்பான சிக்கல்கள்**

உரிமம் வழங்குவதற்கு பணியகம் பின்பற்றும் நடைமுறைகள் சட்டத்துக்குட்பட்ட வகையில் அமையவில்லையென்றும் தன்னிச்சையானது என்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வழங்கப்பட்ட உரிமங்கள் முறையான நடைமுறையின்றி தன்னிச்சையாக இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் அதில் முறைகேடுகள் நடந்திருப்பதும் இங்கு புலப்பட்டது. உரிமம் வழங்கும் அதிகாரம் பணியகத்துக்கு வழங்கப்பட்டுள்ளபோதிலும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் சுற்றாடல் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. இதன் ஊடாக உரிமைப் பத்திரத்தை வழங்கும் செயன்முறையானது சுயாதீனத் தன்மைக்கு சவால் விடுக்கும் வகையில் அமைந்துவிடும் என உறுப்பினர்கள் கவலை வெளியிட்டனர்.

**சுயாதீனமான சட்ட அதிகாரியை நியமிக்க கோப் தலைவர் அறிவுறுத்தல்**

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தில் இடம்பெற்ற அனைத்து முறைகேடுகளையும் கண்டறிவதற்கு சுயாதீனமான சட்ட அதிகாரியொருவரை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ள கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார அறிவுறுத்தல் வழங்கினார். அத்துடன், நிறுவனத்தில் நடக்கும் விவகாரங்களைக் கவனிப்பதற்காக கோப் குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுவைச் செயல்படுத்த தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர, சாந்தபண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, இரான் விக்கிரமரத்ன, பிரேம்நாத்.சி தொலவத்த, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, மதுர விதானகே மற்றும் பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். விளையாட்டுத் துறைசார் தேவைகளை தீர்த்து வைக்குக

## அங்கஜன் எம்.பி. விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரிடம் வலியுறுத்தல்




யாழ்ப்பாணம் மாவட்ட விளையாட்டுத் துறைசார் தேவைகளை தீர்த்து வைக்குமாறு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று (08) காலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில், தற்போது யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் சாதிக்கும் இளைஞர் யுவதிகள் தொடர்பாக எடுத்துரைத்த அங்கஜன் இராமநாதன் எம்.பி, அவர்களுக்கான பயிற்சி வசதிகள், வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க விளையாட்டுத்துறை அமைச்சு கவனமெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# பேருவளை, மருதானையில் விசேட கலந்துரையாடல்



(பேருவளை நிருபர்)

பேருவளை நியூஸ் குழுமத்தின் நிர்வாக அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மக்கார், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி மௌலவி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி), பேருவளை முன்னாள் நகர பிதா மஸாஹிம் மொஹமட் மற்றும் பேருவளை பிரதேச மூத்த கல்விமான்கள், புத்திஜீவிகள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ.பாக்கிர் மாக்காரின் இல்லத்தில் இடம்பெற்றது.

பேருவளை நியூஸ் ஊடகத்தின் கடந்த கால திட்டங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பேருவளை நியூஸ் நிர்வாக ஆலோசகர் ஸவாஹிர், பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் தலைவர் நிஸாம், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். இஹ்ஸான் (ஆசிரியர்) மற்றும் அப்ரார் கல்வி நிலைய உறுப்பினர்கள் உட்பட முக்கிய உறுப்பினர்கள் பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# பயிற்சி வைத்தியர்களுக்கு நியமனங்களை வழங்குக

## திங்கட்கிழமை வரை அரசுக்கு வைத்தியர்கள் காலக்கெடு

நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலையில் சேவையாற்றும் 400க்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பயற்சிகாலம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. ஆனால், அவர்களுக்கான நியமனங்களை முறையாக வழங்கும் செயற்பாடு அநீதியான முறையில் காலந்தாழ்த்தப்பட்டு வருகிறது. எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று (07) ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டே அந்த சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வைத்திய பீடங்களில் ஐந்து வருட பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ள மாணவர்கள் வைத்தியர்களாக பதிவு செய்யப்பட வேண்டுமெனில், அந்த வைத்தியர்களுக்கான பயிற்சிகள் வெற்றிகரமாக வழங்கப்பட வேண்டும். அதேபோன்று, ஆதார வைத்தியசாலை கட்டமைப்பு முதல் உயர் வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சை சேவையை வழங்குவதற்காக வைத்தியர்கள் தீர்மானமிக்க கடமைகளை நிறைவேற்றிவருகிறார்கள்.

அதனால், ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட திகதியில் வரையறுக்கப்பட்ட நியமனங்களை பெற்றுக்கொடுப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. இந்த செயற்பாட்டில் இலங்கை வைத்திய சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பன முக்கிய பொறுப்புகளை கொண்டுள்ளன.

தற்போது வரையில் நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலையில் சேவையாற்றும் 400 வரையறுக்கப்பட்ட வைத்தியர்களுக்கும் அதிகமானவர்கள் பயிற்சிக்காலம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. அவ்வாறு அவர்கள் தற்போதுவரையில் இந்த வைத்தியர்கள் 400 வரையிலானவர்களுக்கு வரையறுக்கப்பட்ட நியமனங்கள் வழங்கி அநீதியாக காலந்தாழ்த்தும் நிலை உருவாகியுள்ளது.

இந்த வைத்தியக் குழுவினருக்கு அப்பால் கனிஷ்ட, கொத்தலாவல வைத்திய பீட வைத்திய மாணவர்கள் குழுவினருக்கும் இந்த தரப்பினருடன் வரையறுக்கப்பட்ட நியமனங்களை வழங்கும் நோக்கில் இந்த கொள்கை பங்களிப்பை செலுத்தியுள்ளது. சைட்டம் நிறுவனத்தின் மாணவர்கள் சிலர் உள்ளிட்ட கொத்தலாவல வைத்திய பீட குழு, மேலும் வரையறுக்கப்பட்ட பயிற்சிக்கான அடிப்படை பயிற்சிகளையும் அவர்கள் பூரணப்படுத்தியிருக்கிறார்கள்.

அதன் பிரதிபலனாக வரையறுக்கப்பட்ட நியமனங்களை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து சுகாதார அமைச்சினால் இலங்கை வைத்திய சபைக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை அனுப்பாமல் காலந்தாழ்த்தும் செயற்பாடு இனங்காணப்பட்டுள்ளது. இந்த அநீதியான செயற்பாட்டின் பின்னணியில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவரின் அச்சுறுத்தல் இருந்துவருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டின் காரணமாக எதிர்வரும் 27ஆம் திகதி வரையறுக்கப்பட்ட பயற்சிகளை நிறைவுசெய்யவேண்டிய வைத்தியர்களுக்கு, அந்த பயற்சிகளை நிறைவுசெய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

சிலரின் குறுகிய நோக்கங்களுக்காக, வைத்தியர்கள் தன்மையும் ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் நெருக்கடியையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அடுத்த திங்கட்கிழமை இடம்பெறவுள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அவசர மத்திய சபைக் கூட்டத்தில் இந்த பிரச்சினைக் குறித்து பேசப்படவுள்ளது. திங்கட்கிழமையாகும்போது இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க அரசாங்க வைத்திய அதிகாரிகளின் சங்கம் தயங்காது. அதன் அடுத்தக்கட்ட செயற்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நுவரெலியா லவர்ஸ் சிலிப் பிரதேசத்தில் சிரமதானம்





(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா லவர்ஸ் சிலிப் பகுதியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் பல்வேறு திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கை நேற்று முன்தினம் (07) இடம்பெற்றது. நுவரெலியா லவர்ஸ் சிலிப் நீர்வீழ்ச்சியை பார்வையிட வருகை தரும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் முறையற்ற முறையில் கழிவுகளை இடுவதால் குடிநீரில் பல்வேறு கழிவுகள் சேருவதால் குடிநீர் மாசடைவதாக பொது சுகாதாரப் பரிசோதகர் கித்சிறி ஹேரத் தெரிவித்தார். நுவரெலியா சுற்றாடல் அமைப்பு, கிராம மக்கள், நுவரெலியா மாநகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சுற்றாடல் நட்புக் குழுவினர் இணைந்து இந்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பியர் டின்கள், மதுபான போத்தல்கள், பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்கள், பொலித்தீன், கருத்தடை உறைகள் என சுமார் அரை தொன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டதாகவும் பொது சுகாதாரப் பரிசோதகர் கித்சிறி ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் பொன்விழா





(பேருவளை நிருபர்)

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் பொன்விழா நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாபீடத்தின் தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளது பிரதிநிதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கலாபீட முதல்வர் அஷ்-ஷெய்க் ஏ.ஸீ.அகார் முஹம்மத் (நளீமி) தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகள் மற்றும் கல்விமான்களின் ஆலோசனைகளையும் ஆதரவையும் பெற்று பிரபல கொடைவள்ளலும் சமூக சேவகருமான சீனன் கோட்டையைச் சேர்ந்த மர்ஹூம் எம்.ஐ.எம்.நளீம் ஹாஜியாரினால் 1973ஆம் ஆண்டு பேருவளையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜாமியாவின் கல்வி பயணத்துக்கு 50 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, பொன்விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், கடந்த வருடங்களில் ஜாமியா நளீமிய்யாவில் தமது ஏழு வருட கற்கை நெறியை நிறைவு செய்த சுமார் 240 பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவும் இடம்பெறவிருப்பது விசேட அம்சமாகும்.

இதுவரை 1000க்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கிய ஜாமியா நளீமிய்யா, கடந்த அரை நூற்றாண்டுகளாக இஸ்லாமிய கல்வித் துறையில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி முஸ்லிம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பெரும் பங்காற்றி வருகிறது. ஜாமியா நளீமிய்யா பட்டதாரிகளில் கணிசமான தொகையினர் அரச மற்றும் தனியார் துறைகளில் நிர்வாக பொறுப்புகளை வகித்து வருவதுடன் அவர்களில் சுமார் 25க்கும் மேற்பட்டோர் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்டங்களை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# தூய்மையான எரிசக்தி மூலம் சமூக, பொருளாதார, சூழல் மாற்றத்திற்கு லிற்ரோ நிறுவனம் உறுதிப்பாடு

இலங்கையின் தேசிய எரிவாயு வழங்குநரான லிற்ரோ லங்கா லிமிட்டெட் நிறுவனம், தூய்மையான மற்றும் நிலைபேறான எரிசக்தி ஆதாரமாக விளங்கும் திரவ பெற்றோலிய வாயுவின் (LPG) மாற்றமுறும் சக்தியின் மூலம், வலுவூட்டப்பட்ட தேசத்தை உறுதிசெய்வதற்கான தனது உறுதிப்பாட்டை சமீபத்தில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. சமூகம், பொருளாதாரம், சூழல் ஆகிய 3 முக்கிய கோட்பாடுகளுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் மாற்றமுறும் செயன்முறையை முன்னெடுப்பதற்கான அதன் தூரநோக்கை நிறுவனம் இங்கு முன்னிலைப்படுத்தியுள்ளது.



கடந்த சில வருடங்களில் உள்ளூர் சந்தையில் எரிவாயுவின் பரவலான ஊடுருவல் மற்றும் அதனைப் பெறுவதற்கான அணுகலை உறுதிசெய்வதற்காக Litro நிறுவனம் குறிப்பிடும்படியான முதலீடுகளைச் செய்துள்ளது. இதன்மூலம் சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் தூய எரிசக்திக்கான அணுகல் அவசியம் என்பதை நிறுவனம் உறுதி செய்கிறது. Litro நிறுவனம் எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் சமூகங்களை மேம்படுத்துவதையும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் லிற்ரோ லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், "சுத்தமான மற்றும் பாதுகாப்பான எரிசக்தியை அணுகுவது என்பது ஒவ்வொரு குடிமகனினதும் அடிப்படை உரிமை என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கைக்கேற்ப நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் அதிகரித்து வரும் எரிவாயுத் தேவையைப் பூர்த்தி செய்ய Litro தனது எல்லையை விரிவுபடுத்தி எமது சேவைகளை மேம்படுத்தும். எரிவாயு சிலிண்டர்களை வழங்குவது மட்டுமின்றி, நம்பகமான மற்றும் சூழலுக்குகந்த எரிசக்தி ஆதாரமாக எரிவாயுவைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் எமது குறிக்கோளாகும். பாரம்பரிய எரிபொருட்களை விட எரிவாயுவின் நன்மைகளை மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து, சமூகங்களுடன் உயிர்ப்பாக செயற்படுவோம்." என்றார்.

எரிவாயுவின் முக்கிய சமூக நன்மைகளில் ஒன்று உடல்நலம் மற்றும் பாதுகாப்புக்கு அது வழங்கும் பங்களிப்பாகும். பாரம்பரிய சமையல் முறைகள், விறகு அல்லது சேதனப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம், தீங்கு விளைவிக்கும் புகை மற்றும் வீட்டினுள் காற்று மாசுபாடு உள்ளிட்ட விடயங்கள் ஏற்படுவதோடு, இது பல்வேறு சுவாச நோய்களுக்கும் வழியேற்படுத்துகிறது. சமையல் நோக்கங்களுக்காக எரிவாயுவை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம், உடல்நல அபாயங்களைக் குறைத்து, நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதை Litro நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை Litro நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. எரிவாயு என்பது குறைந்த காபன் கொண்ட எரிபொருளாகும். இது ஏனைய புதைபடிவ எரிபொருட்களுடன் ஒப்பிடும்போது கணிசமான அளவில் குறைந்த பச்சைவீட்டு வாயுக்களை வெளியிடுகிறது. வழக்கமான எரிசக்தி மூலங்களுக்கு மாற்றாக எரிவாயுவை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் காபன் வெளியீட்டைக் குறைப்பதற்கும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் Litro நிறுவனம் மிகவும் முன்னின்று பங்களிக்கிறது. தூய்மையான எரிசக்தி தீர்வுகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கைக்கான நிலைபேறான எதிர்காலத்தை வளர்ப்பதற்கு நிறுவனம் உறுதி பூண்டுள்ளது.

சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு நன்மைகளுக்கு மேலதிகமாக பொருளாதார நன்மைகளையும் எரிவாயு கொண்டுள்ளது என Litro நிறுவனம் உறுதிப்படுத்துகிறது. வேலை வாய்ப்புகளை உருவாக்கி, உள்ளூர் வணிக நிறுவனங்களை ஆதரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை செயற்படுத்துவதில் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. எரிவாயுவிற்கான தேவை தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அது தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்கமான விடயங்களுக்கான கதவுகளைத் திறந்து பொருளாதாரத்தில் தொடர்ச்சியான சாதகமான முன்னேற்றத்தை உருவாக்குகிறது. இவ்வாறு பொருளாதார மாற்றத்தை மேம்படுத்துவதற்கும் நிலைபேறான வணிகச் சூழலை மேம்படுத்துவதற்கும் Litro நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

Litro நிறுவனம் அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் முனைப்பான ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறது. இந்தக் கூட்டாண்மைகள் நாடு முழுவதும் எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் விரிவான உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்க உதவியுள்ளன. இந்தப் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் எரிவாயுவிற்கு பழகுவதற்கான சூழலை உருவாக்குவதையும் சமூகம், சூழல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் அதன் சாதகமான தாக்கத்தை அதிகப்படுத்துவதையும் Litro நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன், எரிவாவின் அணுகல் மற்றும் கட்டுப்படியான விலையை மேம்படுத்துவதற்காக அதன் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் Litro முதலீடு செய்து வருகிறது. இலங்கை முழுவதிலும் உள்ள நுகர்வோருக்கு எரிவாயு இலகுவாக கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், நிறுவனம் அதன் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளது. கிராமப்புறங்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களிடையே சென்றடைவதற்கும் தூய்மையான மற்றும் திறமையான எரிசக்தி தீர்வின் மூலம் அவர்களை மேம்படுத்துவதற்கும் இந்த முயற்சிகள் ஒரு கருவியாக உள்ளது.

2023 உலக எரிவாயு தினத்தில் Litro Lanka Limited நிறுவனம் தூய்மையான எரிசக்தியை ஊக்குவிப்பதன் மூலம் சமூக, சூழல், பொருளாதார ரீதியான மாற்றத்தை முன்னெடுப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதில் பெருமிதமடைகிறது. ஒரு நிலைபேறான எதிர்காலத்திற்கு ஒரு கூட்டு முயற்சி தேவை என்பதை நிறுவனம் அங்கீகரிக்கிறது. அத்துடன், அது சமூகங்களுக்கு அதிகாரமளித்தல், சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தி அளித்தல் போன்றவற்றில் உறுதியாக உள்ளது.

# 2021 - 2022 ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகளில் தங்கம் வென்றது யூனிலீவர்

2021-2022 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் அக்கரபத்தனையில் உள்ள யூனிலீவரின் Ceytea தொழிற்சாலை, சுற்றாடலுக்கு வழங்கிய பங்களிப்பிற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜனாதிபதி சுற்றாடல் விருது விழாவில் சுற்றுச்சூழல் காப்பு மற்றும் பாதுகாப்பு விடயத்தில் சிறந்த பங்களிப்பைச் செய்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கௌரவமளிக்கப்பட்டது. ஜனாதிபதி விருதுகளான இவை இலங்கையில் சுற்றுச்சூழல் காப்பு மற்றும் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளில் மிகவும் மதிப்புமிக்க அங்கீகாரமாகக் கருதப்படுகின்றது. 2021-2022 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் விழா 2023 ஏப்ரல் 28ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் BMICH இல் நடைபெற்றது. தனது தினசரி விநியோகச் சங்கிலி செயற்பாட்டில் நிலைபேறானதன்மை நடைமுறைகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து செயற்படும் Ceytea ஆனது, அதன் செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தைக் குறைப்பதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், தொழிற்சாலை அதன் வலுசக்தி நுகர்வு மற்றும் நீர் நுகர்வு அளவுகளை முறையே 34% மற்றும் 71% ஆகவும், அதன் $CO_2$ வெளியீட்டை 89% ஆகவும் குறைத்துள்ளது. 2014 ஆம் ஆண்டு முதல் Ceytea ஆனது, ஒரு புத்தாக்கமான கழிவு முகாமைத்துவத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டமானது, உற்பத்திச் செயன்முறையின் போது வெளியிடப்படும் சுமார் 70% கழிவுகளை, அதன் உயிரியல்-திண்மக் கழிவு கொதிகலனுக்கான எரிபொருளாக மாற்றவும் மீதமுள்ள 30% ஆன கழிவுகளை உயிரியல் உரமாக மாற்றவும் உதவுகிறது.



யூனிலீவரின் Ceytea தொழிற்சாலை முகாமையாளர், அனுஷா கொத்தலாவல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து உணவு மற்றும் பானங்கள் தொழில் பிரிவில் தங்க விருதை ஏற்றுக்கொண்டார். சுற்றாடல் அமைச்சு அமைச்சர் நசீர் அஹமட், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே மற்றும் பி.பி. ஹேமந்த ஜயசிங்க, மத்திய சுற்றாடல் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



Ceytea நிறுவனக் குழுவினர்கள்

யூனிலீவர் Ceytea Instant Tea தொழிற்சாலையின் முகாமையாளர் திருமதி அனுஷா கொத்தலாவல இது தொடர்பில் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கையில், "நிலைபேறான அபிவிருத்தியை எமது தேசத்தில் முன்னெடுத்துச் செல்லும் முன்னோடியான நிறுவனங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டதில் நாம் பெருமையடைகிறோம். எமது நிலைபேறான வளர்ச்சி தொடர்பான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதில் எனது குழு மிக ஆர்வத்துடனும்-அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக, பயன்படுத்தப்பட்ட தேயிலை இலைக் கழிவுகளில் 70% ஆனவை, தொழிற்சாலைக்குத் தேவையான நீராவி சக்தியை உருவாக்குவதற்கான உயிரியல் கொதிகலனுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ளவை எமது தேயிலைத் தோட்டங்களில் இடுவதற்கு அவசியமான உயிரியல் உரங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு செய்வதன் மூலம், எமது தேயிலைக் கழிவுகளுக்கு ஒரு வட்டப் பொருளாதாரத்தை உருவாக்கி, அதன் மூலம் எமது சுற்றுச்சூழல் பாதிப்பை நடுநிலையாக்குகிறோம் " -என்றார்.

இது தொடர்பில், யூனிலீவர் விநியோகச் சங்கிலிப் பணிப்பாளர் தமித் அபேரத்ன தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டபோது, "யூனிலீவர் ஸ்ரீ லங்கா ஆகிய நாம், எமது விநியோகச் சங்கிலியின் போது சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கான சில படிகளுடன் முன்னோக்கிச் செயற்படக்கூடிய புத்தாக்கமான வழிகளை நாம் தொடர்ந்து தேடுவதற்கு முயற்சிக்கிறோம். இந்த அங்கீகாரம் எமக்குள் ஒரு பெருமையை ஏற்படுத்துவதோடு, சாதனை உணர்வையும் ஏற்படுத்துகிறது. எமது தொழிற்துறையில் எம்மாலான சாத்தியமான விடயங்களை அதன் எல்லை வரை கொண்டு சேர்ப்பதற்கு இது எம்மைத் தூண்டுகிறது. எமது மூலோபாய தூரநோக்கிற்கு உண்மையாக இருந்து, நிலைபேறான வாழ்க்கையை எல்லோருக்கும் பொதுவானதாக மாற்றுவதற்காக தமது கடமைக்கு அப்பாற்பட்டு செயற்படும் இத்தொழிற்சாலையின் முகாமையாளர் திருமதி. அனுஷா கொத்தலாவல மற்றும் அவரது குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்." - என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான திருமதி ஹாஜர் அலபிபி, "சுற்றுச்சூழலுக்கான எமது சாதகமான பங்களிப்புகளுக்காக ஜனாதிபதி விருது எனும் அங்கீகாரத்தைப் பெறுவது யூனிலீவர் ஸ்ரீ லங்கா ஆகிய எமக்கு உண்மையில் ஒரு பெருமையான தருணமாகும்.

இது உண்மையிலேயே எமது மக்கள், இந்த பூமி, சமூகங்களை எல்லாவற்றிற்கும் முதலாக முன்னிறுத்தி வைப்பதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாகும். சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் அங்கீகாரமளிப்பதற்காக, ஒரு வலுவான கட்டமைப்பை நிறுவி, நிலைபேறான இலங்கையை நோக்கிச் செல்வதற்காக பெருநிறுவனங்களை ஊக்குவிக்கும் ஜனாதிபதி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்." - என்றார்.

Ceytea நிறுவனத்தால் தயாரிக்கப்படும் Black Instant தேயிலைத் தூளானது, Pepsi-Lipton International JV இனால் தயாரிக்கப்படும் ஐஸ் டீயின் (Iced Tea) அடிப்படை மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அந்நிறுவனம் Lipton மற்றும் Brisk போன்ற உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களின் கீழ் உலகளாவிய ரீதியில் 70% ஆன ஐஸ் டீ தொடர்பில் காணப்படும் கேள்வியை பூர்த்தி செய்கிறது. இலங்கையில் உள்ள Black Tea உற்பத்தித் தொழில்துறையின் தண்டு மற்றும் நார்ப்பொருளான BMF ஐ தனது முக்கிய மூலப்பொருளாக Ceytea கொள்வனவு செய்து, அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி Black Instant தேயிலைத் தூளாக அதனை மாற்றுகிறது. இதன் மூலம் தேயிலைக் கழிவுகளிலிருந்து பெறுமதியான உற்பத்தியை உருவாக்குகிறது.

இவ்வாறு, சிலோன் தேயிலையின் நன்மதிப்பை உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பான வியாபாரத்திற்கு கொண்டு செல்வதோடு, Ceytea மூலம் 17 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக அந்நியச் செலாவணியை நாட்டிற்கு கொண்டு வருவதன் மூலம், நாட்டின் மிக உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில்களில் ஒன்றாக விளங்குகின்றது.

# மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 4.6 பில்லியனாக பதிவு

★ ஒருங்கிணைந்த மொத்த வருமானம் 49.4% ஆல் அதிகரித்து ரூபா 116.8 பில்லியனாக உள்ளது.

★ வங்கியின் தனி அடிப்படையில் ரூபா 3.7 பில்லியன் மற்றும் ஒருங்கிணைந்த அடிப்படையில் ரூபா 4.6 பில்லியன் முழுமையான வருமானம் பதிவாக்கப்பட்டுள்ளது.

★ வெளிவாரி கடன் மறுசீரமைப்பிற்கு அமைவாக, வெளிநாட்டு நாணய மதிப்பிலான முதலீடுகளில் தொழில்துறையின் மிகக் குறைந்தளவான ஆபத்துகளின் பலன்களைத் தொடர்ந்து பேணி வருகிறது.

★ தற்போதுள்ள BASEL விதிகளின் கீழ் சக வங்கிகளிடையே அதிக நிதித்திறன் நிலை மட்டங்களைப் பேணுகிறது.

★ வாடிக்கையாளர்களை டிஜிட்டல் முறையில் உள்வாங்கும் முயற்சியின் வேகம் தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது.

மக்கள் வங்கியானது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த அதன் காலாண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளை இன்று அறிவித்ததுடன், மொத்த ஒருங்கிணைந்த செயற்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் ஆகியன முறையே ரூபா 24.0 பில்லியன் மற்றும் ரூபா 7.2 பில்லியன் (2022-1வது காலாண்டு: ரூபா 42.6 பில்லியன் மற்றும் ரூபா 11.0 பில்லியன்) தொகையாகப் பதிவாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டைப் போலவே, இக்காலாண்டில் அதிக வட்டிச் செலவுகள் தொடர்ந்து வகைப்படுத்தப்பட்டதுடன், இக்காலப்பகுதியில் நிலவிய அதிக வட்டி வீத சூழலே இதற்கு காரணம். இது 2022, 1 ஆம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, ஒருங்கிணைந்த தேறிய வட்டி வருமானம் 49.7% ஆல் குறைவடைந்து ரூபா 15.3 பில்லியனாக இருந்தது. வங்கியின் சில கடன்களின் மீள்விலையிடல் நடவடிக்கையை அதன் அதிகம் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு ஒத்திவைக்கும் முயற்சிகளின் பிரதிபலிப்பிற்கு இதுவும் ஒரு வகையில் காரணமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 4.5 பில்லியன் ஆகும். இது 2022, 1 ஆம் காலாண்டின் போது ஒரு குறிப்பிட்ட உருப்படி நீங்கலாக, இதே காலாண்டு ஒப்பீட்டு அடிப்படையில் 40.0% வளர்ச்சியைக் காண்பித்துள்ளது.

பணவீக்கத்தைப் பிரதிபலிக்கும் செலவு அழுத்தங்களைப் பொறுத்தவரையில், இதில் பெரும்பாலானவை 2022, 1 ஆம் காலாண்டுக்குப் பின்பு எழுந்தவை. ஒருங்கிணைந்த மொத்த செயற்பாட்டுச் செலவுகள் 10.1% ஆல் அதிகரித்து ரூபா 14.4 பில்லியனை எட்டியது (2022, 1 ஆம் காலாண்டு: ரூபா 13.1 பில்லியன்). இது தொழில்துறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதுடன், அதன் ஒரு பகுதியாக, நியாயமான முறையில் சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவுக் கட்டுப்பாட்டிற்கான குழுமவாரியான அதிக முயற்சிகளையும் பிரதிபலித்தது.

வாடிக்கையாளர்களின் மொத்த ஒருங்கிணைந்த வைப்புத்தொகை ரூபா 2,513.1 பில்லியனை எட்டியது - அதாவது, 2.6% ஆல் அதிகரித்ததுடன், ஒருங்கிணைந்த தேறிய கடன்கள் 4.2ம%ஆல் குறைவடைந்து ரூபா 1,835.1 பில்லியனாக இருந்தது. தேறிய கடன்களின் சரிவு, மேலும் சரிவடையும் தேசிய பொருளாதார சூழலில் கடன் வழங்குவதைக் கட்டுப்படுத்த வங்கி மற்றும் குழுமத்தின் அவதானத்துடனான முயற்சியின் ஒரு பாகத்தைப் பிரதிபலிக்கிறது. மொத்த ஒருங்கிணைக்கப்பட்ட சொத்துகள் இக்காலப்பகுதியின் முடிவில் ரூபா 3,072.2 பில்லியனாக காணப்பட்டன (2022 இன் நிறைவில்: ரூபா 3,133.1 பில்லியன்).

2023 மார்ச் 31 இல் வங்கியின் Tier I மற்றும் மொத்த மூலதனப் போதுமை விகிதங்கள் முறையே 11.8% மற்றும் 16.2% ஆக இருந்ததுடன் (2022 இன் நிறைவில்: 11.9% மற்றும் 16.3%), அதே சமயம், ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில், இது முறையே 13.0%மற்றும் 16.9% ஆக இருந்தது (2022 இன் நிறைவில்: 13.3% மற்றும் 17.2%). 2017 ஜூலை 1 அன்று Basel III தொடங்கப்பட்டதில் இருந்து எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பிரதிபலிக்கும் வகையில் வங்கியின் நிதித்திறன்- நிலைமட்டங்கள் சிறந்ததாகவே உள்ளன. கூடுதல் தற்செயல் நிகழ்வு நோக்கங்கள் உட்பட, அதன் ஒழுங்குமுறை மூலதனத்தை மேம்படுத்துவதற்கான மேலும் முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.





மேலும், குறிப்பிட்ட காலப்பகுதியில் வங்கி அனைத்து முக்கிய ஒழுங்குமுறை நடவடிக்கைகளையும் வெற்றிகரமாகச் சந்தித்தது. வங்கி மற்றும் குழுமத்தின் பெறுபேறுகள் குறித்து கருத்து தெரிவித்த மக்கள் வங்கியின் தலைவர் தி சுஜீவ ராஜபக்ஷ,

"கடந்த பல வருடங்களாக இத்துறை பல எதிர்மறை தாக்கங்களை எதிர்கொண்டுள்ள அதேவேளை, தொடர்ந்தும் தடுமாறி வருகின்றது. முதல் காலாண்டில் எமது பெறுபேறுகள், மிகவும் பாதகமான சூழ்நிலைகளில் கூட எமது தொடர்ச்சியான வலிமை மற்றும் தாங்குதன்மை மற்றும் நெகிழ்வுத்திறனுக்கு சான்றாக உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக வங்கியானது அதன் தொடர்புபட்ட பல்வேறு தரப்பினரின் தேவைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதுடன், தேசத்தின் நலனுக்கு முதலிடம், வாடிக்கையாளர் நலன் பாதுகாக்கப்படுகின்றமை அரசாங்க முயற்சிகள் ஆதரிக்கப்படுகின்றமை மற்றும் அதே நேரத்தில், வங்கியின் வணிக நலன்களும் பூர்த்தி செய்யப்படுகின்றமை ஆகியவற்றை உறுதி செய்வதில் பல சந்தர்ப்பங்களில் முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளது.

இக்காலாண்டில் எங்களின் வருமான வளர்ச்சியானது எங்களின் முக்கிய வங்கிச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு சான்றாக உள்ளது. எனினும், உயர் வட்டி வீதம் காணப்பட்ட சூழலில் தொழிற்றுறை முழுவதும் காணப்பட்ட தவிர்க்க முடியாத வருவாய் அழுத்தங்களுக்கு இயல்பாகவே வழிவகுத்தது. எவ்வாறாயினும், இந்தக் காலாண்டில் ஒரு நிறுவன நிலைப்பாட்டில் இருந்து அளவியல் மற்றும் பண்பியல் அம்சங்களைப் பொறுத்தவரையில் பல சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. ஏனைய பல்வேறு சாதனைகளுக்கு மத்தியில் இனங்காணப்பட்ட மூலோபாய வளர்ச்சிப் பகுதிகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் எமது திறன், ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய நிலைப்பாட்டில் இருந்து பணப்புழக்கத்தில் நீடித்த மேம்பாடுகளை உறுதிசெய்வது மற்றும் இடர் முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் மேலும் மேம்பாடுகளை ஏற்படுத்துவது ஆகியவை குறிப்பாக இதில் அடங்கும். மேலும், எங்களின் டிஜிட்டல் முதலீடுகள் தொடர்ந்து சிறந்த பலனைத் தருகின்றன. இது வங்கியின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளுக்கு சிறந்த பலனைத் தருகிறது!

எதிர்காலத்தைப் பொறுத்தவரையில், சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியில் இருந்து வெளிவருபவை உட்பட, தேசத்தின் பொருளாதாரத்தில் காணப்படும் பல நேர்மறையான முன்னேற்றங்களுடன், எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறோம். கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் அவ்வாறே செயல்பட்டு வந்துள்ளதால், தேசத்தின் நலன் மற்றும் எம்முடன் தொடர்புபட்ட தரப்பினரின் நலன்களைப் பாதுகாப்பதில் எங்களின் பங்கை ஆற்றுவதற்கான எங்கள் அர்ப்பணிப்புடனான உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு எமது நிறுவனம் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!" - என்று குறிப்பிட்டார்.

இப்பெறுபேறுகள் குறித்து கருத்து தெரிவித்த வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான (பதில்) கிளைவ் பொன்சேகா அவர்கள் கூறியதாவது:-

"அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திற்கு தனித்துவமானது உட்பட பல அழுத்தங்கள் இருந்தபோதிலும், நாங்கள் தொடர்ந்து பல முனைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். மிக முக்கியமான சில விடயங்களை குறுகிய காலத்திற்குள் தீர்த்து வைத்துள்ளோம். எமது பிரதான கவனம், எங்களுடைய பணப்புழக்கத்தை மேலும் வலுப்படுத்துவது, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய பகுதிகளை முன்னெடுப்பது மற்றும் எங்கள் வாடிக்கையாளர்கள் இந்த சவாலான காலங்களில் அவற்றைக் கடந்து செல்வதை ஆதரிக்கும் அதேவேளை, எங்கள் சொத்து - தரத்தை நிர்வகிப்பது ஆகியவற்றின் மீது உள்ளது. தற்போதைய மட்டங்களில் இருந்து எங்களது ஒழுங்குமுறை மூலதனத்தை உயர்த்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை நாங்கள் தற்போது எடுத்து வருகிறோம். எங்கள் வழங்கலின் வெற்றியானது பல முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் காண்பிக்கப்படும் நீடித்த மேம்பாடுகளில் சிறப்பாகப் பிரதிபலிக்கிறது.

குறிப்பிட்ட சில சமூக ஊடகத் தளங்களில் கடந்த சில வாரங்களாகச் செயற்படாத கடன் தள்ளுபடிகள் குறித்து பரப்பப்படும் செய்திகள் தொடர்பாக - அத்தகைய தள்ளுபடிகள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன். அத்தகைய கடன்களை திரும்பப் பெறுவதற்கான எங்களின் வழக்கமான கடன் அறவீட்டுச் செயல்முறை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்கள் வங்கியின் வெற்றியின் அத்திவாரம் பிரதானமாக எங்களின் பணியாளர்களிடமும் எமது விசுவாசமான வாடிக்கையாளர்களிடமும் தங்கியுள்ளது. நாம் முன்னோக்கிச் செல்லும் பாதை இன்னும் பல சவால்களால் நிரம்பியிருக்கும் அதேவேளை, கடந்த பல ஆண்டுகளாக நாம் செய்ததைப் போல, நம்பிக்கையுடனும், வீரியத்துடனும் அவற்றை ஆவலுடன் எதிர்கொள்வோம் - என்றார்.

# ஜனாதிபதியின் சுற்றுச்சூழல் விருது வழங்கும் நிகழ்வில் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்புக்காக MAS Holdingsக்கு அங்கீகாரம்









தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடைத் தொழில்நுட்ப உற்பத்தியாளரான MAS ஹோல்டிங்ஸ், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் முன்மாதிரியான அர்ப்பணிப்புக்காகவும் 2021 – 2022 ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருது வழங்கும் நிகழ்வில் அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) ஏற்பாடு செய்திருந்த விருது வழங்கும் நிகழ்வு 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

MAS Holdingsக்கு இரண்டு தங்க விருதுகள், ஒரு வெண்கல விருது மற்றும் ஒரு தகுதி விருது ஆகியவற்றுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்துறையை கட்டியெழுப்புதல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சமூகத்தை ஊக்குவிப்பதற்காக அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காகவும் பாராட்டப்பட்டது.

MAS Holdingsன் மூலோபாய வர்த்தகப் பிரிவான Bodyline ஆனது, ஆடைத் துறையில் நீடித்து நிலைத்திருப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்பிற்காக, ஆடைக் கைத்தொழில் பிரிவில் தங்க விருதை வென்றது, இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டது. இன்றைய வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளுக்கேற்ற வகையில் அவர்களின் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும், அவர்களின் தயாரிப்பு உருவாக்கும் செயற்பாட்டில் நிலையான மாற்றங்களைக் கண்டறிவதற்கும் Bodyline இன் அர்ப்பணிப்பை இந்த சாதனை எடுத்துக்காட்டுகிறது.

MAS இன் வார்ப் பின்னல் தீர்வுகள் வழங்குநரான Noyon Lanka (Pvt) Ltd., சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான அவர்களின் பங்களிப்பிற்காக Textile மற்றும் Textile Process Industries பிரிவில் தங்க விருதையும் பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக, Noyon Lanka ஆனது புத்தாக்கமான தயாரிப்புத் தீர்வுகள், தாக்கத்தைக் குறைப்பதற்கான செயல்முறை மேம்படுத்தல்கள் மற்றும் நிறுவனத்திற்குள் நிலைத்தன்மையின் கலாசாரத்தை முன்னெடுப்பதில் தலைமைத்துவ அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நிலையான வணிக மாதிரிகளுக்கான அதன் செயற்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

MAS Active Contourline ஆனது, தமது செயற்பாடுகள் மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்காக வெண்கல விருதைப் பெற்றுள்ளது. இவ் விருதானது சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜயசிங்கவினால், வழங்கப்பட்டது.

MAS KREEDA Mihinthale ஆனது, பல ஆண்டுகளாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் அவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பிற்காக ஒரு தகுதி விருதைப் பெற்றது, இது MAS இன் குழுநிலை நிலைத்தன்மை மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, MAS Plan for Change இன் ஒரு பகுதியாக பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவதற்கான MAS இன் அர்ப்பணிப்புகளை பிரதிபலிக்கிறது.

ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருது வழங்கும் நிகழ்வு இலங்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறையில் மிகவும் மதிப்புமிக்க அங்கீகாரமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுகளை வெல்வது MAS Holdings இன் நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியை எடுத்துக்காட்டுகிறது மற்றும் மாற்றத்திற்கான MAS திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட அர்ப்பணிப்புகளை மேலும் வலுப்படுத்துகிறது.

MAS Holdings தொடர்பாக

தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடைத் தொழில்நுட்ப நிறுவனமான MAS Holdings, ஆடைகள் மற்றும் ஜவுளிகளின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு-விநியோகஸ்தர் ஆகும். 118,000 க்கும் மேற்பட்ட உலகளாவிய சமூகத்துடன், இன்று, MAS 17 நாடுகளில் பரந்து விரிந்துள்ளது, உலகெங்கிலும் உள்ள முன்னணி நவநாகரிக மையங்களில் நிறுவப்பட்ட வடிவமைப்பு இடங்கள் உள்ளன. MAS போர்ட்ஃபோலியோ அதி வேகமாக விரிவடைந்துள்ளது; உலகளவில் அணியக்கூடிய தொழில்நுட்பம், ஃபெம்டெக், ஸ்டார்ட்-அப்கள், ஏற்றி இறக்கல்கள் மற்றும் ஆடை பேட்டைகள். 30 ஆண்டுகளுக்கும் மேலாக, MAS அதன் நெறிமுறை மற்றும் நிலையான பணிச்சூழலுக்காகவும், அதன் கைவினைத்திறன் மற்றும் தயாரிப்பு சிறப்பிற்காகவும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. மாற்றத்திற்கான MAS திட்டம், பொருட்கள், உயிரினங்கள் மற்றும் பிரபஞ்சம் ஆகிய மூன்று தூண்களின் கீழ் நிலையான மாற்றத்தை உருவாக்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை கோடிட்டுக் காட்டுகிறது. இதன் மூலம், MAS அதன் அனைத்து ஊழியர்களையும் மாற்றங்களை உருவாக்குபவர்களாக இருக்க ஊக்குவிக்கிறது, கனவுகளை செயற்படுத்துகிறது மற்றும் நமது கிரகத்தில் வாழ்க்கையின் கட்டமைப்பை வளப்படுத்துகிறது.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk thamilanbusiness@gmail.com

## றைனோ ரூஃபிங் நிறுவனத்தினால் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர் காத்திருப்பு பகுதி நிர்மாணம்



(இடமிருந்து) – வைத்தியர் தம்மிக குமார (மருத்துவ அதிகாரி – திட்டமிடல்), வைத்தியர். சம்பத் குலதிலக – மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரம், மாவட்ட பொது வைத்தியசாலை, கம்பஹா, வைத்தியர். பிரியந்த இல்லேபெரும – பிரதிப் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, கம்பஹா, வைத்தியர்(திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர – பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, கம்பஹா, ஈ.ஜே. ஞானம் – முகாமைத்துவப் பணிப்பாளர், றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட், ஜூட் பெர்னான்டோ – பணிப்பாளர், றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட், மனோஜ் வீரமன் – பிரதம நிறைவேற்று அதிகாரி, El Toro ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட் மற்றும் இந்திக ராஜபக்ஷ – பிரதம செயற்பாட்டு அதிகாரி, றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட் ஆகியோர் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவு வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நோயாளர் காத்திருப்பு பகுதியின் திறப்பு வைப்பவத்தில் காணப்படுகின்றனர்.

இலங்கையில் கூரைத் தயாரிப்புகள் துறையின் சந்தை முன்னோடியாகத் திகழும் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சைத் தொகுதி வளாகத்தில் நோயாளர் காத்திருப்பு பகுதியொன்றை நிர்மாணித்துள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகை தருவோருக்கும் அவர்களுடன் சமுகமளிக்கும் குடும்பத்தாருக்கும் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே இந்த நிர்மாணம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் காத்திருப்பு பகுதியின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றதுடன், இதில் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.ஜே. ஞானம், றைனோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் ஊழிய அங்கத்தவர்கள், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர். வைத்தியர். (திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர மற்றும் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

100 நோயாளர்கள் வரை காத்திருக்கக்கூடிய வகையில் 1400 சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக் கப்பட்டுள்ள இந்தக் காத்திருப்பு அறையில் பொது அறிவித்தல் கட்டமைப்பு மற்றும் மின்விசிறிகள் போன்றன பொருத்தப்பட்டுள்ளன. றைனோ முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.ஜே.ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், "றைனோவைச் சேர்ந்த எம் அனைவருக்கும் இது மிகவும் விசேடமான தருணமாகும், ஏனெனில், இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளமையானது, எனது மறைந்த தந்தை. தேசமான்ய ஏ.வை.எஸ். ஞானத்தின் 100ஆவது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. 1978 ஆம் ஆண்டில் றைனோ நிறுவனத்தின் தவிசாளர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராக இவர் பொறுப்பேற்றதுடன், 1962 ஆம் ஆண்டில் குழுமமாக எமது பயணத்தை ஆரம்பித்து 60 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

றைனோ ரூஃபிங்கைச் சேர்ந்த நாம் தொடர்ந்தும் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதுடன் சிறந்த தரம் வாய்ந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி அவர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கின்றோம். எமது பணியின் சிறந்த உதாரணமாக இந்தக் காத்திருப்புப் பகுதி அமைந்திருப்பதுடன் இலங்கையில் கூரைகள் மற்றும் சீலிங் தயாரிப்புகள் தொடர்ச்சியாக விநியோகிப்பதில் சந்தை முன்னோடியாகத் திகழ்வதற்கான எமது உறுதிமொழியாகவும் அமைந்துள்ளது. இந்தக் காத்திருப்புப் பகுதியின் நிர்மாணத்துடன் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் தினசரி சுயநோக்கமற்ற பங்களிப்புக்காக நன்றி தெரிவிப்பதுடன் சமூகத்துக்கு மீள வழங்குவது எனும் தகவலின் பிரகாரம் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் பங்காற்றியிருந்த எனது அணியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்." – என்றார்.

கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் (திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர கருத்துத் தெரிவிக்கையில், "இந்தக் காத்திருப்பு பகுதியின் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக றைனோ ரூஃபிங் போன்றதொரு பாரிய நிறுவனம் முன்வந்து செயலாற்றியிருந்தமையைக் காண்பதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம். நாளாந்த அடிப்படையில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும், வெளியேறும் நோயாளர்களுக்கு இந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினூடாக பெருமளவு பயன் கிடைக்குமென வைத்தியசாலையைச் சேர்ந்த நாம் கருதுகின்றோம். அத்துடன், நோயாளர்களினதும் அவர்களின் அன்புக்குரியவர்களினதும் சௌகரியத்தை உறுதிசெய்வதற்கான ஒரு திட்டமாகவும் இது அமைந்துள்ளது"– என்றார்.



கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சைத் தொகுதி வளாகத்தில் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட் நிர்மாணித்துள்ள நோயாளர் காத்திருக்கும் பகுதி.

தரம் தொடர்பில் கூரைத் தொழிற்றுறையின் அடையாளமாக அமைந்துள்ளதுடன், சகலவிதமான கட்டடங்களினதும் கூரைத் தீர்வுகளுக்காக அனைவரின் பேரபிமானம் பெற்ற றைனோ குழுமம், தொடர்ச்சியாக தமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பொது மக்களின் நலன்புரிச் செயற்பாடுகளில் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2021 ஆம் ஆண்டில் தேசம் கொவிட்–19 தொற்றுக்கு முகங்கொடுத்திருந்த காலப்பகுதியில் தமது ஆதரவை வழங்கும் வகையில், சுகாதார அமைச்சுக்கு 8 ICU வென்டிலேற்றர்களை றைனோ நன்கொடையாக வழங்கியிருந்தது. 2022 ஆம் ஆண்டில், கம்பஹா தக்சிலா கல்லூரியின் சேதமடைந்த கட்டடத்தை மறுசீரமைப்பு செய்யும் பணிகளை முன்னெடுத்திருந்தது. 2016 ஆம் ஆண்டில், றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட்டினால் 2004ஆம் ஆண்டில் சுனாமி அனர்த்தம் காரணமாக தமது வீடுகளை இழந்த ஐம்பது குடும்பங்களுக்கு தமது வீடுகளை முழுமையாக மறுசீரமைப்பு செய்துகொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2006 ஆம் ஆண்டில் அவர்களுக்கு றைனோவினால் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.

இன்று, நிலைபேறான அபிவிருத்தியில் பெருமைக்குரிய பங்காளராக றைனோ திகழ்வதுடன், நிர்மாணத்துறையிலும், நாடு முழுவதையும் சேர்ந்த மில்லியன் கணக்கான கட்டட நிர்மாணிப்பாளர்கள் மத்தியிலும் நம்பிக்கையை வென்ற நாமமாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் முதல் தர கூரை மற்றும் சீலிங் உற்பத்தியாளராகத் திகழும் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட், குழுமத்தின் பிரதான பெறுமதிகளான தரம், மீண்டெழுந்திறன் மற்றும் நேர்மை போன்றவற்றை பின்பற்றி சமூக, சூழல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றுடன் இணைந்த வாழிடப் பகுதிகளுக்கு வளமூட்டும் வகையில் கூரை மற்றும் சீலிங் தயாரிப்புகளை விநியோகிக்கின்றது.

## மாதம்பையில் தனித்துவமான புதிய காட்சியறையைத் திறந்துள்ள சியெட்

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் இலங்கையில் இரண்டாவது நிறுவன முதலீட்டில் நிர்வகிக்கப்படும் காட்சியறையை (CIDO) திறந்துள்ளது. தனது வர்த்தக முத்திரை பொறிக்கப்பட்ட உற்பத்திகளுக்கு காட்சியறைகளில் மேலதிக இடங்களைப் பெற்றுக்கொடுக்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தனித்துவமான காட்சியறைகளை நாடு முழுவதும் உருவாக்கும் திட்டத்தின் கீழ் இது திறக்கப்பட்டுள்ளது.

சியெட்டின் இந்தப் பிரத்தியேக காட்சியறை, சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் உள்ள இரட்டைக்குளம் மாதம்பையில் உள்ள அஸங்க டயர் ஹவுஸில் முறைப்படி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சியெட் CIDO காட்சியறையானது மூன்றாண்டு கால விநியோகத் தொடர் விரிவாக்க மூலோபாயத்தின் கீழ் வர்த்தக முத்திரையை பிரத்தியேகமாக காட்சிபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பங்காளர் காட்சியறைகளில் உற்பத்திகளின் முன்னேற்றத்துடன் கூடிய வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

தங்களது அதி நவீன உள்ளக வடிவமைப்பு, ஒளியமைப்பு, தளபாடங்கள், டயர்களின் காட்சியமைப்பு, மாதிரிகளை வைப்பதற்கான இராக்கைகள், சோபா, தொலைக்காட்சி என்பனவற்றுடன் கூடிய வாடிக்கையாளர் வரவேற்பு பகுதி, தூரத்தில் இருந்தே புலப்படக் கூடிய கோபுர அடையாளம், அலங்கார வர்ணமயமாக்கப்பட்ட வெளிப்பகுதி, உள்ளக வர்த்தக முத்திரை அடையாளம் என பல அம்சங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் கார்கள், விளையாட்டு ரக வாகனங்கள் என எல்லா வகையான வாகனங்களுக்குமான டயரோடு தொடர்புடைய சேவைகளை வழங்கும் வகையில் தேவையான கருவிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய காட்சியறையில் பல்வேறு வகையான சியெட் டயர்கள் விஷேட கழிவுடன் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. டயர் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம், வாகன பற்றரிகள், கணினிமயப்படுத்தப்பட்ட சக்கர சமநிலை, வாகன உதிரிப்பாகங்கள், காற்று நிரப்பும் வசதிகள் என்பனவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ள முடியும்.

புதிய சில்லறை விற்பனை எண்ணக்கருவில் நிறுவனத்தின் தொடர்ச்சியான முதலீடுகள் பற்றி கருத்து வெளியிட்ட சியெட் களனி முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி "பொருளாதாரச் சரிவானது புதிய டயர்களுக்கான கேள்வியை கணிசமாகக் குறைத்துள்ளது. ஆனால், இலங்கையின் டயர் தேவையில் பெருமளவை வழங்குபவர்கள் என்ற வகையில் சியெட் அதன் சந்தைசார் தேவைகளில் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றது. வாடிக்கையாளர் அனுபவத்தை தொடர்ந்து மேம்படுத்தி சில்லறை விற்பனைசார் வலையமைப்பைத் தரமுயர்த்தும் எமது தொடர்ச்சியான கடப்பாட்டையும் இது வலியுறுத்தி நிற்கின்றது. அதேவேளை, எமது முக்கியமான விநியோகஸ்தர்களுக்கு விற்பனையை மேம்படுத்திக் கொள்ளவும் இது உதவுகின்றது" – என்று கூறினார்.




(மேலே இடப்பக்கம்) சியெட் களனி முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி, அஸங்க டயர் ஹவுஸ் உரிமையாளர் கே.பி.ஐ. அஸங்க பெர்ணான்டோ ஆகியோர் மாதம்பையில் புதிய சியெட் காட்சியறை திறப்பு விழாவில் காணப்படுகின்றனர்.

இலங்கை மற்றும் இந்திய கூட்டு முயற்சிகளில் மிகவும் வெற்றிகரமானதாகக் கருதப்படும் இலங்கையில் உள்ள சியெட் களனி உற்பத்தி வளாகம் இலங்கையின் மொத்த டயர் தேவையில் அரைவாசியை உற்பத்தி செய்கின்றது. இலங்கையில் இந்தக் கூட்டு முயற்சியின் மீதான ஒட்டுமொத்த முதலீடு இன்றைய நிலையில் 8 பில்லியன்கள் ஆகும். இலங்கையில் இதன் உற்பத்திச் செயற்பாடுகள் ரேடியல் டயர்களில் (பயணிகள் கார்கள், வேன்கள் மற்றும் விளையாட்டு நோக்கு வாகனங்கள்) வர்த்தக ரீதியான (நைலோன் மற்றும் ரேடியல்) மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் மற்றும் விவசாயப் பிரிவு வாகனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன.

இலங்கை சந்தைத் தேவையில் ரேடியல் பிரிவில் 48 வீத பங்கையும், ட்ரக் பிரிவில் 80 வீத பங்கையும், இலகு ட்ரக் டயர் பிரிவில் 84 வீத பங்கையும், முச்சக்கர வண்டி பிரிவில் 51 வீத பங்கையும், மோட்டார் சைக்கிள் பிரிவில் 36 வீத பங்கையும், விவசாய வாகனப் பிரிவு டயர் தேவையில் 72 வீதத்தையும் சியெட் வர்த்தக முத்திரை பூர்த்தி செய்கின்றது. மேலும் சியெட் களனி அதன் உற்பத்திகளில் 20 வீதத்தை 16 தெற்காசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## LankaPay விருது வழங்கும் நிகழ்வில் மகுடம் சூட்டப்பட்ட கொமர்ஷல் வங்கி




கொமர்ஷல் வங்கித் தலைவர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன தலைமையிலான கொமர்ஷல் வங்கிக் குழு மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் பிரமுகர் சகிதம் LankaPay தொழில்நுட்ப விருது வழங்கும் நிகழ்வில் காணப்படுகின்றனர்.

டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் தனது திகைப்பூட்டும் செயற்பாட்டை அண்மையில் கொமர்ஷல் வங்கி வெளிப்படுத்தியுள்ளது. லங்காபே தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவில் வங்கித்துறைக்கான பிரிவில் வங்கிப்பிரிவுக்கான ஒட்டுமொத்த விருது உள்ளடங்கலாக ஏழு விருதுகளையும் வென்று அது சாதனை படைத்துள்ளது. கொடுப்பனவு முறை செயற்பாடுகளுக்கான புதிய தொழில்நுட்பங்களுக்காக வழங்கப்படுகின்ற ஒரேயொரு விருது இதுவாகும்.

வங்கி பெற்றுக்கொண்ட இந்த சுவாரஸ்யமான விருதுகளில் நான்கு தங்க விருதுகளும் அடங்கும். வங்கி நிறுவனங்களுக்கான உள்ளக டிஜிட்டல் கொடுப்பனவுகளில் ஒட்டுமொத்த ஆற்றல், சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான மிகச் சிறந்த வங்கி, லங்கா QR வழியாக சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான சிறந்த நடமாடும் செயலி, இவ்வாண்டின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கான வங்கி என்பனவே தங்க விருதுகளுக்கான பிரிவுகளாகும். ஆண்டின் சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவு மூலோபாய நிதி நிறுவனம், ஆண்டில் லங்காபே கார்ட் செயற்பாடு என்பனவற்றுக்கான வெள்ளி விருதுகள், நிதி உள்ளடக்கத்துக்கான இவ்வாண்டின் மிகச் சிறந்த வங்கிக்கான தகுதிக்குரிய விருது என்பனவே மொத்தமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட விருதுகளாகும்.

"வங்கித் துறையில் புதிய கண்டுபிடிப்புக்கான பிரிவிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் தெட்டத்தெளிவான தலைமைத்துவத்துக்கான அங்கீகாரம் என்பது ஓர் அளப்பரிய சாதனையாகும். மேலும் இது கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் மாற்றத்துக்கும் வசதிகளையும் உள்ளடக்கத்தையும் ஊக்குவிப்பதற்கான தொடரான தொழில்நுட்ப கண்டு பிடிப்புகளுக்கும் கிடைத்திருக்கின்ற அங்கீகாரமாகும்" என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க. "எங்களின் அணுகுமுறை வாடிக்கையாளர்கள் மத்தியில் எதிரொலிக்கின்றது. மேலும் அவர்களின் டிஜிட்டல் வங்கி அனுபவத்தில் அது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் இந்த விருதுகள் மீள் உறுதி செய்கின்றன. இந்த அங்கீகாரமானது சமீப காலத்தில் நாம் மேற்கொண்ட டிஜிட்டல் மாற்றங்களின் வெற்றியையும் பறைசாற்றி நிற்கின்றது" என்று அவர் மேலும் விளக்கினார்.

202 ஆம் ஆண்டுக்கான லங்காபே விருதுகளுக்கான முடிவுகளின் மதிப்பீடு 2021 ஏப்பிரல் 1முதல், 31 மார்ச் 2022 வரையான காலப்பகுதியில் உள்ளக வங்கி பரிமாற்றங்களை கவனத்தில் கொண்டதாக அமைந்திருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் இந்த புத்தாக்க கண்டுபிடிப்புக்கான விருதுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் தொடர்ச்சியாக கொமர்ஷல் வங்கி விருதுகளை வென்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதல் 100% கார்பன் பாவனையைக் குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 12 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பைக் கொண்ட 270 கிளைகள் மற்றும் 950 தானியங்கி இயந்திரங்களைக் கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது. மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தைக் கொண்டுள்ளது.

## கென்ரிச் ஃபினான்ஸினால் வெள்ளவத்தை பிரதேசத்துக்கு "சாலை பாதுகாப்பு அடையாளப் பலகை"

கென்ரிச் ஃபினான்ஸ் லிமிட்டெட் நிறுவனம், நாட்டில் பொறுப்புள்ள நிதி நிறுவனம் என்ற வகையில் சமூகத்துடன் எப்போதும் ஆழமான ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் CSR வேலைத்திட்டமானது சுற்றுச்சூழல், கல்வி மற்றும் சமூகம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

வெள்ளவத்தை பிரதேசத்தில் பொறுப்பற்ற வாகன நிறுத்தம் நீண்டகாலமாக பெரும் பிரச்சினையாகக் காணப்படுவதனால் கென்ரிச் ஃபினான்ஸ் வெள்ளவத்தை பொலிஸாருக்கு உதவுவதற்கு சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி முக்கியமான இடங்களில் வீதிப் பாதுகாப்பு அடையாள பலகைகளை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பயணிகள் மற்றும் சாரதிகள் இருபாலரும் வீதியை பாதுகாப்பாக வைத்திருக்க ஒத்துழைக்க வேண்டும். இந்த முயற்சியானது வெள்ளவத்தை பகுதியில் வீதி பாதுகாப்பு மற்றும் பொறுப்பான வாகனத் தரிப்பிட நடைமுறைகளை ஊக்குவிக்கும்.




கென்ரிச் ஃபினான்ஸ் நிறுவனமானது கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதியன்று, வெள்ளவத்தை பொலிஸாருக்கு "சாலை பாதுகாப்பு அடையாள பலகைகளை" வழங்கியது. இந்தப் பலகைகள் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி W. V. T. மதுஷங்கவிடம் உதவிப் பொது முகாமையாளர்– Corporate Communications. முகாமையாளர் சமந்த W. குணவர்தனவினால் கையளிக்கப்பட்டது. மங்கள சுசந்த –உதவிப் பொது முகாமையாளர் – Corporate Communications நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இது பிரதேசத்தில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு தேவையாக இருந்ததால், கென்ரிச் ஃபினான்ஸின் இந்த நடவடிக்கை வெள்ளவத்தை பொலிஸாரால் வெகுவாகப் பாராட்டப்பட்டது. கென்ரிச் ஃபினான்ஸின் சமூக ஈடுபாடு மற்றும் சாலைப் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்பு ஒரு பொறுப்பான நிதி நிறுவனமாக அதன் மதிப்புகளின் பிரதிபலிப்பாகும். நிறுவனம் அதன் CSR திட்டத்தின் மூலம் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது .

# முதலை தாக்கியதால் மீனவர் பலி

### மகிழூர் பிரதேசத்தில் சம்பவம்

**(மண்டூர் செய்தியாளர்)**

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் பிரதேசத்தில் மீனவரொருவர் முதலையின் தாக்குதலுக்குட்பட்டு பலியான சம்பவம் புதன்கிழமை(07) இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி மகிழூர் பிரதேசத்தைச் சேர்ந்த 47வயதான தம்பிராஜா ராஜமாணிக்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள குளத்துக்கு மீன் பிடிப்பதற்காகச் சென்றவர் முதலையின் தாக்குதலுக்கு அகப்பட்டு படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன்போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் மாட்டிறைச்சி விற்பனைக்கு தற்காலிகத் தடை

### இறைச்சிக் கடைகளுக்கும் பூட்டு




**(சாய்ந்தமருது செய்தியாளர்)**

நாட்டில் மாடுகளுக்கு ஒருவித தொற்றுநோய் வேகமாகப் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லையினுள் வியாழக்கிழமை(08) தொடக்கம் ஒரு வார காலத்துக்கு இறைச்சிக்காக மாடு அறுப்பதும் மாட்டிறைச்சி விற்பதும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சில மாடுகள் கல்முனை பிராந்தியத்தில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அது ஏனைய மாடுகளுக்கு விரைவாகப் பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதனாலும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சி, மக்களின் நுகர்வுக்கு உகந்ததல்ல என்றும் மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி வழங்கிய அறிவுறுத்தலுக்கமைவாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபை எல்லையினுள் குறித்த காலப்பகுதியில் மாடு அறுத்தல், மாட்டிறைச்சியை விற்பனை செய்தல் மற்றும் மாட்டிறைச்சியை பொதி செய்தல் என்பவற்றுக்கு தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இத்தடை உத்தரவை மீறி செயற்படுகின்ற மாட்டிறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்வுத்தரவையடுத்து, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று மாட்டிறைச்சிக் கடைகள் எவையும் திறக்கப்படாமல் மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

### 'இயற்கை வள சுரண்டல்களை நிறுத்துக'

# வாகரையில் கண்டனப்பேரணி





**(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)**

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாகரை பிரதேசத்தில் இடம்பெறும் இயற்கை வள சுரண்டல்களை நிறுத்தக்கோரிய கண்டனப் பேரணி வியாழக்கிழமை(08) வாகரை பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் நீண்ட காலமாக அரச மற்றும் தனியார் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலியல் நீதியை பாதிக்கும் வகையிலான இல்மனைட் அகழ்வு மற்றும் இறால் பண்ணைத் திட்டங்களை முற்றாகத் தடை செய்யக்கோரிய கண்டனப் பேரணியாக இப்பேரணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் (PCCJ) அமைப்பின் அனுசரணையுடன் வாகரை பிரதேச சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த பேரணியானது, கண்டலடி தொடக்கம் வாகரை பிரதேச செயலகம் வரை இடம்பெற்று வாகரை வாழ் மக்களால் இயற்கை வளங்களைப் பாதிக்கும் வகையிலான அனைத்து திட்டங்களையும் முற்றாக நிறுத்தக் கோரிய மனு ஒன்றும் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஜி.பிரணவனிடம் கையளிக்கப்பட்டது. இப்பேரணியில் வாகரைப் பிரதேசத்தின் விவசாய - மீனவ அமைப்புகள், இளைஞர்கள், பெண்கள், செயற்பாட்டாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாய்க்கால்கட்டு வீதிக்கான புனரமைப்பு வேலைத்திட்டம்

**(திராய்க்கேணி செய்தியாளர்)**

அட்டாளைச்சேனை புறத்தோட்டம் வாய்க்கால்கட்டு வீதிக்கான புனரமைப்பு வேலைத்திட்டம் கிறிசலிஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதன்கிழமை(07) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் பங்கேற்புடனான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட வாய்க்கால்கட்டு பாதைக்கான புனரமைப்பு வேலைத்திட்டத்தை புறத்தோட்டம் சனசமூக நிலையம் மேற்கொள்ளவுள்ளது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்போடு மூன்று வருட செயற்றிட்டத்தை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாகவே மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள வீதிகளைப் புனரமைக்கும் முகமாக புறத்தோட்டம் வாய்க்கால்கட்டு வீதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பாதை வேலைத்திட்டத்துக்காக சுமார் 16 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதை புனரமைப்பு வேலைத்திட்ட நிகழ்வுகள் புறத்தோட்டம் சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்றபோது,



அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், கிறிசலிஸ் நிறுவனத்தின் சமூக நல்லாட்சி சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசகர் விமன்சா சொய்சா, கிறிசலிஸ் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.பாஸ்கரன், கிராம சேவை அதிகாரி இர்பான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கிறிசலிஸ் நிறுவனத்தின் செயற்றிட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைப் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு 15 சனசமூக நிலையங்களூடாக இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**மாகாணசபை முறைமைகள ரத்துச்செய்ய வேணுமாம் எண்டு ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் றோகித அபயகுணவர்தனா சொல்லியிருக்காரு எலுவா.? நல்லது அப்படி எண்டா மறுகா தமிழீழம் தான் சரி என்று சொல்லாம சொல்லுறாரு போல இதுக்கு அரசுடன் ஒட்டியிருக்கிற மத்தியில் கூத்தாச்சி அமைச்சர் டக்லசும், கிழக்க மீட்கிற இராஜாங்க அமைச்சர்களான புள்ளயானும், கறுப்பு சட்ட அமலும் என்ன சொல்லுவாங்களோ? அவங்களால தலை மட்டும்தான் ஆட்ட முடியும்..!**

# மருதமுனை, பெரிய நீலாவணையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

**(சாய்ந்தமருது, மருதமுனை செய்தியாளர்கள்)**



டெங்கு ஒழிப்புக்கான கொத்தணி சுத்திகரிப்பு வேலைத் திட்டம் மருதமுனை மற்றும் பெரிய நீலாவணை பிரதேசங்களில் வியாழக்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலின் பேரில் கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு நான்காம் நாள் நிகழ்வாக இச்சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஜே.எம்.நிஜாமுதீன், ஐ.எல்.எம்.இத்ரீஸ், மாநகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர் எம்.அத்ஹம் மற்றும் வலய மேற்பார்வையாளர்களும் பொலிஸாரும் இப்பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

கொத்தணி வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையின் 04 வலயங்களுக்குமான திண்மக் கழிவகற்றல் பிரிவின் முழு ஆளணியினரும் வாகனங்களும் மருதமுனை, பெரிய நீலாவணை வலயத்தில் முழுமையாக களமிறக்கப்பட்டு இவ்வலயத்தின் அனைத்து பகுதிகளிலும் குப்பைகளைச் சேகரித்து அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# ரிஷாத் எம்.பி. - சம்மாந்துறை இளைஞர் குழுவினர் சந்திப்பு



**(சம்மாந்துறை செய்தியாளர்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் சம்மாந்துறை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் உடனான குழுவினர்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கொழும்பு கட்சிக் காரியாலயத்தில் புதன்கிழமை(07) இடம்பெற்றது.

இதன்போது கல்வி, கலை, கலாசாரம், தொழில் ஊக்குவிப்பு என பலதரப்பட்ட விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டதுடன் தற்கால அரசியல் நிலைப்பாடு, முஸ்லிம் கட்சிகளின் கடமை, நாட்டின் பொருளாதாரம் என பல துறைகள் சார்ந்தும் ஆழமான கருத்துகள் ரிஷாத் பதியுதீனினால் வழங்கப்பட்டன. சம்மாந்துறை இளைஞர்களின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை கட்சி அமைப்பாளரினூடாக வழங்குமாறும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் தானும் கட்சியும் வழங்குவதாக இதன்போது ரிஷாத் எம்.பி. வாக்குறுதியளித்துள்ளார்.

# கிழக்கில் ஜனநாயக பங்குதாரர்களுக்கான அரங்கத்தை உருவாக்கும் கலந்துரையாடல்

**(கிண்ணியா செய்தியாளர்)**

'கிழக்கு மாகாணத்தின் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடலொன்று கிண்ணியா பிரதேச சபை மண்டபத்தில் வியாழக்கிழமை(08) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வை அகம் மனிதாபிமான வள நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதனூடாக உண்மைத் தன்மை, வெளிப்பாட்டுத் தன்மையை அதிகரித்தல் போன்றவற்றை வைத்து திறம்பட எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த திட்டமானது கிண்ணியா, தம்பலகாமம், குச்சவெளி, கந்தளாய், வாகரை போன்ற பிரதேச சபை எல்லைகளை உள்ளடக்கிய வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதில் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு இதற்காக மக்கள் பங்கேற்பும் வெளிப்படைத் தன்மை தொடர்பிலும் குறித்த சமூக மட்ட நிறுவனங்கள் ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட உள்வாங்கப்பட்டுள்ளன. மக்கள் தேவைகள் முன்னுரிமைப் படுத்தப்பட்ட அடிப்படையில் இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. சிவில் சமூகத்தவர்கள், ஊடகவியலாளர்கள் இதன்போது பிரதேச சபையின் பணி நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தனர். இதில் கிண்ணியா பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் இ.கலைமதி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.நஜாத், அகம் மனிதாபிமான வள நிலைய பிரதி இணைப்பாளர் அ.மதன், அகம் மனிதாபிமான வள நிலைய திட்ட ஆலோசகர் என்.மிதுனாளன் உட்பட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், கிண்ணியா பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பு நிரற்படுத்தல் தொடர்பாக விழிப்பூட்டல்





**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பு 2024ஆம் ஆண்டுக்கான பிரதி தொகை மதிப்பு ஆணையாளர்கள் மற்றும் உதவி தொகை மதிப்பு ஆணையாளர்களுக்கு நிரற்படுத்தல் கட்டம் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபரும் தொகைமதிப்பு ஆணையாளருமான திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(06) இடம்பெற்றது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டத்தின் மூலம் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இலத்திரனியல் முறையில் ரெப்லட் (Tab) மூலம் மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான தொகைமதிப்பு மேற்கொள்ளப்படவுள்ளமை தொடர்பாக இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

துல்லியமான தரவைப் பிழையின்றி தரவேற்றம் செய்ய உத்தியோகத்தர்களை வழிபடுத்த வேண்டும் என அரசாங்க அதிபர் இதன்போது ஆலோசனை வழங்கியிருந்தார். இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) நவரூபரஞ்ஜினி முகுந்தன், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவப் பிரிவுப் பணிப்பாளரும் மாகாண ஒருங்கிணைப்பாளருமான எஸ்.எச்.எம்.மன்சூர், மாவட்ட இணைப்பாளர் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் ஜெயசம்பத் லியனகே, புள்ளி விபரவியலாளர் ரி.டி.எஸ்.தர்ஷன, மாவட்ட புள்ளிவிபரவியலாளர் ரி.ஜெய்தனன், பிரதேச செயலாளர்கள், பிரதம கணக்காளர், மாவட்ட செயலக கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், புள்ளிவிபரப் பிரிவின் வெளிக்கள மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என துறைசார் திணைக்கள அதிகாரிகள் பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பில் மாவட்ட சிறுவர் சபை மீளமைப்பு



**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாவட்ட சிறுவர் சபை உறுப்பினர்கள் தெரிவு உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை (08) இடம் பெற்றது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில், 14 பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சிறார்களில் இருந்து சிறுவர் சபைக்கான உறுப்பினர்கள் வாக்கெடுப்பு மூலம் தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் தெரிவு செய்யப்பட்டனர். சிறார்களின் பங்கேற்பு உரிமையை மேம்படுத்துவதற்கு உதவும் முகமாக இச்சபை இரு வருடம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிறுவர் உரிமை மேம்பாட்டை மேலும் வலுப்படுத்த ஏயூ லங்கா(AU Lanka) நிறுவனம் இணைத்து செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ரீ. மதிராஜ், பதவி நிலை உதவியாளர் எம்.ரிலா, ஏயு லங்கா நிறுவன இணைப்பாளர் நந்தகுமார் மற்றும் 14 பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஒவ்வொரு ஆண்டும் 8 -10 மில். தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கடலில் கலப்பு


உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் 8 முதல் 10 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கடலில் கலப்பதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.

உலக பெருங்கடல் தினம் நேற்று (08) அனுஷ்டிக்கப்பட்டது.

மக்களின் வாழ்க்கைக்கு பல வழிகளிலும் நன்மையளிக்கும் கடல் மற்றும் கடல்சார் உயிரினங்களைப் பாதுகாக்க வலியுறுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 8ஆம் திகதியை உலகப் பெருங்கடல் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உலகப் பெருங்கடல் தினத்தை முன்னிட்டு யுனெஸ்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 400 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. அவற்றில் பாதியளவாவன பொலித்தீன் பைகள், கோப்பைகள் மற்றும் பொதியுறைகள் போன்ற ஒற்றை உபயோகப் பொருட்களேயாகும்.




இந்த பிளாஸ்ரிக்குகளில் ஒவ்வொரு ஆண்டும் 8 மில்லியன் முதல் 10 மில்லியன் தொன்கள் வரையான கழிவுகள் கடலில் கலக்கின்றன.

ஒரு பிளாஸ்ரிக் பையின் தடிப்பானது தட்டையாக இருப்பதால் அவை 11,000 சதுர கிலோமீற்றர் (4,250 சதுர மைல்கள்) பரப்பளவைக் கடக்கின்றன. அதாவது கட்டார், ஜமைக்கா அல்லது பஹாமாஸ் போன்ற சிறிய நாடுகளின் அளவைப் போன்றன.

இது இவ்வாறு செல்லுமாயின் இன்னும் 50 ஆண்டுகளில், பிளாஸ்ரிக் கழிவுகள் 550,000 சதுர கிலோமீற்றர் (212,000 சதுர மைல்கள்) - பிரான்ஸ், தாய்லாந்து அல்லது உக்ரைன் அளவுக்கு பெரிய அளவில் வளரக் கூடுமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வெடித்துச் சிதறும் கிளாயுவா



அமெரிக்காவின் ஹவாய் தீவிலுள்ள கிளாயுவா எரிமலை வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பைக் கக்கி வருகிறது.

உலகில் எந்நேரமும் சீற்றத்துடன் காணப்படும் எரிமலைகளில் கிளாயுவா எரிமலையும் ஒன்று. 2019ஆம் ஆண்டு அந்த எரிமலை வெடித்தபோது ஏராளமான வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின.

கடைசியாக கடந்த ஜனவரி மாதம் கிளாயுவா எரிமலை வெடித்துச் சிதறியது. அதன்பிறகு சீற்றம் தணிந்து காணப்பட்ட எரிமலை மீண்டும் தற்போது வெடித்துச் சிதறி வருகிறது. இதனால் எரிமலை இருக்கும் பகுதி தீப்பிழம்பாகக் காட்சியளிக்கிறது.

உலக செய்திகள்

## ஆப்கான் பஸ் விபத்து: 25 பேர் பரிதாபப் பலி

ஆப்கானிஸ்தானின் சார்-இ-புல் மாகாணத்தில் பஸ்ஸொன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். திருமண வீடொன்று குறித்த நிகழ்வில் பஸ்ஸில் பயணித்த 9 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

## புதிய மாறுபட்ட கொவிட்: சீனாவுக்கு காத்திருக்கும் ஆபத்து



சீனாவில் ஒவ்வொரு ஆறுமாதத்திலும் கொவிட் தாக்குமென்றும் இதில் பல இலட்சம் பேர் பாதிக்கப்படுவார்களென்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கொவிட் மீதான அனைத்துக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டதே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. நோய்த்தொற்றின் அலைகள் புதிய மாறுபாடுகள் தோன்றுவதற்கான அபாயத்தைக் கொண்டுள்ளன என சியாட்டிலிலுள்ள வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் தொற்று நோயியல் நிபுணர் அலி மொக்தாட் தெரிவித்துள்ளார். சீனாவில் ஜூன் மாத இறுதிக்குள், வாரத்திற்கு 6 கோடியே 50 இலட்சம்பேர் பாதிக்கப்படுவார்கள் என சீனாவின் நுரையீரல் சிகிச்சை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இனச் சேர்க்கையின்றி கருவுற்ற முதலை



அமெரிக்காவில் உயிரியல் பூங்காவொன்றில் 16 ஆண்டுகளுக்கும் மேலாக தனிமையில் பராமரிக்கப்பட்டுவந்த முதலையொன்று எவ்வித சேர்க்கையுமின்றி 10இற்கும் மேற்பட்ட முட்டைகளை இட்டுள்ளது. இது ஆராய்ச்சியாளர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தானே இனப்பெருக்கம் செய்யும் இந்த செயல்முறை பார்த்தீனோஜெனிசிஸ் அல்லது 'கன்னி பிறப்பு' என்று அழைக்கப்படுகிறது.

ராஜ நாகம், வேளா மீன், கலிபோர்னியா காண்டோர் கழுகுகள் போன்றவற்றில் பெகல்டேடிவ் பார்த்தீனோஜெனிசிஸ் (facultative parthenogenesis) ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்தாலும், முதலை இனங்களில் முதல் கன்னிப் பிறப்பு இதுதான் என விலங்கியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

கன்னிப் பிறப்புத்தன்மை கொண்ட விலங்குகள், அவற்றின் சொந்த மரபணுப்பொருளை இணைக்கும் திறன் பெற்றவை என்றும், அதன் மூலமே கன்னிப் பிறப்பு நிகழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைன் அணை உடைப்பு: நீரில் மூழ்கிய 29 கிராமங்கள்



உக்ரைனின் கெர்சன் பகுதியிலுள்ள அணை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தில் 29 கிராமங்கள் மூழ்கியுள்ளநிலையில், 17 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதுடன், 42ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள கெர்சன் பகுதியில் அமைந்துள்ள கக்கோவ்கா அணையை உக்ரைன் படைகள் தகர்த்ததாக ரஷ்யாவும், ரஷ்ய படைகள் தாக்கி அழித்ததாக உக்ரைனும் மாறி மாறி குற்றஞ்சாட்டிவருகின்றன.

அணையிலிருந்து வெளியேறிய பல மில்லியன் கன அடி நீரால் 29 கிராமங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இரப்பர் படகுகள் மற்றும் தண்ணீரில் செல்லக்கூடிய கனரக வாகனங்கள் மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

## உலகின் அதிகமான மாசுபட்ட நகரமானது நியூயோர்க்



உலகிலேயே அதிகமாக மாசுபட்ட நகரம் நியூயோர்க் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கனடாவின் காட்டுத் தீயால் படரும் புகையால் நியூயோர்க் நகரம் மாசுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புகைமூட்டம் நியூஜெர்சியில் ஹட்சன் நதியைக் கடந்து நியூயோர்க் நகரில் மாசு ஏற்படுத்தி வருவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகின் மிகமோசமான காற்றுமாசு டில்லியிலும் பாக்தாத்திலும் ஏற்படுவதாகக் கருதப்படும் நிலையில், நியூயோர்க்கின் காற்று மாசு அதைவிடவும் மோசமடைந்துள்ளது.

தூசு, புகை மூட்டம் போன்றவை கிரேட் லேக்ஸ் பகுதியிலிருந்து வானம் முழுவதும் பரவியதால் நியூயோர்க் மக்களை வீடுகளில் இருக்கும்படி அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

## தம்புள்ள அணியில் இணையும் சனத்

இந்தாண்டு நடைபெறவுள்ள எல்.பி.எல் தொடருக்கான தம்புள்ள அவுரா அணியின் கிரிக்கெட் இயக்குனராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் அதிரடி துடுப்பாட்ட வீரருமான சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் இயக்குனர் பொறுப்பு மூலமாக தம்புள்ள அவுரா அணியின் பயிற்சியாளர்கள் ஒழுங்கமைப்பு, ஏலத்தில் வீரர்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் அணியின் உத்திகள் என பல்வேறு விடயங்களில் சனத் ஜயசூரிய கவனம் செலுத்தவுள்ளார்.

குசல் மெண்டிஸ் தலைமையில் களமிறங்கவிருக்கும் தம்புள்ள ஓரா அணி, வீரர்கள் ஏலத்தின் போது சிறந்த வீரர்கள் கொள்வனவுடன் பலமான அணியொன்றைக் கட்டமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சனத் ஜயசூரிய கடந்த ஆண்டு கண்டி பல்கோன்ஸ் அணியுடன் இணைந்து பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## 20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் - 2023
# 14 தங்கத்துடன் ஜப்பானுக்கு முதலிடம்; இரு தங்கத்துடன் ஏழாமிடத்தைப் பிடித்த இலங்கை






20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தென் கொரியாவின் யெச்சியோன் நகரில் ஆரம்பமாகி நேற்று முன்தினம் இரவுடன் நிறைவுக்கு வந்தது.

இறுதிநாளில் ஆடவருக்கான 1500 மீற்றர் ஓட்டத்தின் இறுதிப்போட்டியில் களமிறங்கிய இலங்கை வீரர் ஷெஹான் தில்ரங்க பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தார்.

முன்னதாக 4X400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் களமிறங்கிய இலங்கை அணி தங்கப் பதக்கம் வென்று அசத்தியது.

இதேவேளை, மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையின் தருஷி கருணாரத்னவும் தங்கப்பதக்கம் வென்றார்.

அதன்படி இறுதி பதக்கப் பட்டியலில் இலங்கை 2 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலத்துடன் மொத்தமாக 5 பதக்கங்களை வென்று ஏழாமிடத்தைப் பிடித்தது. 14 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தமாக 23 பதக்கங்களுடன் ஜப்பான் முதலிடத்தைப் பிடித்தது. சீனா இரண்டாமிடத்தையும், இந்தியா மூன்றாமிடத்தையும் பிடித்தன.

## அமெரிக்க அணியுடன் கைகோர்க்கும் மெஸ்ஸி

ஆர்ஜென்டீன உதைபந்து அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி எம்.எஸ்.எல். அணியான இன்டர் மியாமியில் சேர முடிவு செய்துள்ளார்.

இரண்டு வருடங்கள் பிரெஞ்ச் தலைநகரில் இருந்த பின்னர் ஒப்பந்தம் முடிவடையும் நிலையில், மெஸ்ஸி பி.எஸ்.ஜியை விட்டு இந்த மாத இறுதியில் வெளியேறுகிறார்.

இந்நிலையில், 35 வயதான மெஸ்ஸி அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கழகங்களில் ஒன்றான இன்டர் மியாமியில் சேர முடிவு செய்துள்ளார். மேலும் பார்சிலோனா அணி நிர்வாகம் முன்வைத்த வாய்ப்புகளை நிராகரித்துள்ள மெஸ்ஸி, சவூதி அரேபிய அணியில் சேரவிருப்பதாக வெளியான தகவல்களையும் பொய்யாக்கியுள்ளார்.



## வாரத்திற்கு மூன்று முறை மட்டுமே ஆஜராக வேண்டும் - தனுஷ்கவின் வழக்கில் புதிய திருப்பம்



பாலியல் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க தினசரி அல்லாமல் வாரத்திற்கு மூன்று முறை மட்டுமே பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

32 வயதான தனுஷ்க, கடந்த நவம்பரில் கைதுசெய்யப்பட்டவுடனேயே இலங்கை கிரிக்கெட்டால் இடைநீக்கம் செய்யப்பட்டார். அவர் எதிர்கொண்ட நான்கு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளில் மூன்று கடந்த மாதம் கைவிடப்பட்டது. இந்நிலையில், தனுஷ்க தினசரி அல்லாமல் வாரத்திற்கு மூன்று முறை மட்டுமே பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டுமென்று நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## கறுப்புப் பட்டியுடன் களமிறங்கிய இந்திய - ஆஸி. வீரர்கள்



ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் முதல் நடைபெற்றுவரும் நிலையில், போட்டியை ஆரம்பிக்க முன்னர் இந்திய அணி வீரர்கள் ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக மௌன அஞ்சலியைச் செலுத்தினர்.

மேலும் அன்றைய தினம் தங்களுடைய கைகளில் கறுப்புப் பட்டியை அணிந்து போட்டியில் விளையாடினர். இவர்களுடன் நடுவர்கள் மற்றும் அவுஸ்திரேலிய அணி வீரர்களும் கறுப்புப்பட்டி அணிந்துள்ளனர்.

ஒடிசாவில் இரண்டு பயணிகள் ரயில்கள், சரக்கு ரயில் ஒன்றுடன் மோதியதில் பாரிய விபத்தொன்று கடந்த வெள்ளிக்கிழமை பதிவாகியிருந்தமை தெரிந்ததே. குறித்த இந்த விபத்தில் 275 இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகக்கிண்ண தகுதிகாண் தொடருக்கான இலங்கை உத்தேச குழாம் வெளியானது

சிம்பாப்வேயில் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளுக்கான இலங்கை அணியின் 15 பேர் கொண்ட உத்தேச குழாம் நேற்று வெளியானது.

தசுன் சனக்க தலைமையிலான குறித்த குழாமில் அண்மையில் ஆப்கான் அணியுடனான தொடரில் இடம்பெற்றிருந்த முக்கிய வீரர் அஞ்சலோ மெத்யூஸ் இடம்பெறவில்லை. இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொள்கிறது.

**15 பேர் கொண்ட இலங்கை அணி**

தசுன் சானக்க (கேப்டன்), குசல் மெண்டிஸ் (துணை கேப்டன்), பத்தும் நிஸ்ஸங்க, திமுத் கருணாரத்ன, சரித் அசலங்கா, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, வனிந்து ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, துஷான் ஹேமந்த, சாமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, லஹிரு குமார, கசுன் ராஜித, மதீஷ பத்திரன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7